175429

"பூந்துறைப் புராணம்"

02:23:38.216 PM
N17
175429

உ

சிவமயம்.

பூந்துறைக்

காளியண்ணப்புலவரியற்றிய

# பூந்துறைப் புராணம்.

இது,

பூந்துறை

மகா-ள-ள-ஸ்ரீ துரைசாமிக்கவுண்டரவர்கள்,

மகா-ள-ள-ஸ்ரீ கருப்பகவுண்டரவர்கள்,

இவர்கள் விருப்பத்தின்படி,

திருச்செங்கோடு,

பத்திராதிபர்,

தி. அ. முத்துசாமிக் கோனரால்,

தமது,

விவேகதிவாகரன் அச்சுக்கூடத்தில்

பதிப்பிக்கப்பட்டது.

1917.

OFFICE OF THE REGISTRAR
3 JAN 1918
MADRAS

62
1.18

B
175429

உ

கணபதி துணை.

# முகவுரை.

புராணம் என்பது பழமையாம். பூந்துறைப் புராணம் என்றால், பூந்துறை என்னும் திருப்பதியின் பழமையான சரித்திரமென்பது பொருள். இந்தப் பூந்துறையானது கொங்கு மண்டலம் இருபத்து நான்கு நாட்டிற்கும் தலைமைபெற்ற பூந்துறை நாட்டின், மேல்கரை முப்பத்திரண்டு கிராமத்துக்கும் முதன்மையான ஊர். இப்புராணம் மற்றைய தலபுராணங்களைப்போலவே தெய்வீக மகிமைகளைச் சொல்வதுடன், கொங்குமண்டலத்தையும், அதிற் குடியேறிய வேட்டுவர், வேளாளர்களுடைய சில சரித்திரத்தையுங் கூறுகின்றது ஆனால் இதிற் கூறுங்குடியேற்றச் சரித்திரமானது ஏனைய பொதுச் சரித்திரங்களுக்குச் சற்று முரண்படுகின்றது. புராணிகர் எந்த ஆதாரம் பற்றிச்சொன்னாரோ தெரியவில்லை. தற்சிறப்பாகக் கூறும் சில தலபுராணங்களில் பல கதைகள் இவ்வாறு மலிந்து கிடக்கின்றன.

இதன் ஏட்டுப்பிரதி ஒன்று நூலாசிரியரின் பௌத்திரர் ம-ள-ள-ஸ்ரீ முத்துசாமி பிள்ளையவர்கள் உதவினர். அதுசமீபகாலத்துப் பிரதியானதால் அதில் உள்ளபடியே பதிப்பித்தனன். பூந்துறை ம-ள-ள-ஸ்ரீ துரைசாமிக் கவுண்டரவர்கள், ம-ள-ள-ஸ்ரீ கருப்பக்கவுண்டரவர்கள் ஆகிய இவ்விருவர்களின் விருப்பத்தின்வண்ணம் இந்தப் புராணக்கதையைச் சுருக்கிப் பூந்துறைப்புராண சாரம் என வசனம் எழுதியிருக்கிறேன். பிழையிருப்பின் ஆன்றோர் மன்னிப்பார்களாக.

திருச்செங்கோடு.
2—10—17

இங்ஙனம்.
தி. அ. முத்துசாமிக்கோனார்.

175429
478 / 2745
[illegible]

சிவமயம்.

# இந்நூலாசிரியர் வரலாறு.

திருச்செங்கோட்டுக்குக்கிழக்கே ஒருநாழிகையில் உள்ள, மண்டகப்பாளையம் என்னும் ஊரிலே கருணீகர் மரபிலே, கிராமக்கணக்கு வேலைபார்ப்பவரான செப்புக்காளி பிள்ளைக்குப்புத்திரராகப்பிறந்தார். சிறுவயதில் வாசிப்பதில் அக்கறையாகாட்டுவதில்லை. விளையாட்டில் பிரியம்அதிகமாக இருப்பர். வாசிப்பவர்கள், பிரசங்கிப்பவர்களிடத்து அகலாமல். அவர்கள் சொல்லாமல் அவர்களுக்கு அவசியமான காரியத்தைச்செய்வர். கிராமக்கணக்குஎழுதலாகிய குலத்தொழிலைச் சிந்திப்பது இடையிராது. அதனால் ஊரார்கள் இவரைமதிப்பதில்லை. திருச்செங்கோட்டில் அக்காலத்தில் சிற்றம்பலக் கவிராயரென்பவர் பிரசித்த வித்வானாக விளங்கினர், இலக்கண இலக்கியங்களில் வல்லவர். அவரிடத்தே பாடங்கேட்டுக் கொண்டனர். பின்பு திருவாவடுதுறை சென்று ஸ்ரீபண்டார சந்நிதியவர்களைத் தரிசித்து, இலக்கண வேலாயுத சாமியவர்களிடத்தில் தொல்காப்பியப்பொருளதிகாரம் பாடங்கேட்டனர். ஒருநாள் ஆசிரியர் ஏட்டில் ஒருநூலெழுதி மைசாத்திய திருமுறையைப் பார்த்த சில தம்பிரான்கள் புகழ்ந்தார்கள். அப்பொழுது இவர் :—

விருத்தம்.

பண்ணை மொழி யகலாத பெண்ணுற் பங்கப்
படுசிவனு மிவற் கிணையோ பாரீர் யார்க்கும்
வெண்ணெயென வுருகுநெஞ்சக் கருணைமூர்த்தி
வேலப்பதேசிக னோர்விநயங் கூர்ந்து
பெண்ணைமட லூடெழுதி மஞ்சட்பூசிப்
பெருக்கமையிட் டலங்கரித்துப் பேணிப்பேணிக்
கண்ணையுமைத் தொருசாக்ஷியிட்டுக்கட்டிக்
கற்புடைய பெண்ணாக்கொடு கட்டினானே.

எனக்கூறக்கேட்டு மகிழ்ந்தனர். கேட்டதம்பிரான்கள் செய்யுள் சொல்லும் விரைவையும், பொருளமைதியையுங் கண்டுவியந்தார்கள்.

சிலகாலங்கிருந்தும் சந்நிதானத்தார் ஆசிரியரிடத்தும் விடைபெற்றுக்கொண்டு திருச்செங்கோட்டுக்கு வந்து உமையொருபாகனை வணங்கியிருந்தனர்.

இவரது புலமைத்திறத்தையும் இனிய குணத்தையும் கேள்விப்பட்ட பூந்துறை நாராயணசாமிக்கவுண்டர் இப்புலவரைக்கண்டு பேசி, காளி என்று எடுத்துக் கூளி, என்று முடித்து ஒரு வெண்பாச்சொல்லுக என்றனர்,

வெண்பா

"காளி முதன்று கறங்கிவளர் பூந்துறைசை
வாளிமன் னாரா வணசிமன்னன்—கேள்வியினாற்
பொன்னாரணியி ராமன் பொருப்பனுக் கென்செய்வேண்
ணன்னுள்ளம வெவ்வியகூளி"

கா + அளி = காளி. குடாகாயம் என்பதுபோல்வது.

எனக்கூறக்கேட்டு மகிழ்ந்து தம்மூருக்கு அழைத்துப்போய் வீடும் கொஞ்சம் விளைநிலங்களும் சம்பாதித்துக் கொடுத்து நாட்டுப்புலவரென அபிமானித்துவைத்திருந்தனர். பழயகோட்டைக்குச்சென்று உத்தமக்காமிண்ட நல்ல சேனாபதிச்சர்க்கரை மன்றாடியாருக்கு அனுப்பிய.

விருத்தம்.

கற்றவருக்கீயாதன் பாவிவெகுதண்டு மிண்டன் கருணையில்லான், உற்றறிவிலாதவன் றப்பிலிகேடு கெட்டவன்மெய் யுரையான் சண்டி, நற்பணியேகைக்கணியான் றேவடியார்க்கேவல் செய்யா னல்லதம்பிச்,சர்க்கரைசேய் நல்லசேனாபதியாஞ் சர்க்கரையு தாரன்றானே..

இதனை வாசித்து உட்பொருளை நேசித்து அன்புடன் வரவழைத்துபசரித்து, அவர் கருத்தை யறிந்து. மதுரைக்குப்போய்வருஞ் செலவுக்குப் பொருளுதவி யனுப்பினர். மடவாளகம் லட்சுமண பாரதியாரும் இவரையடிக்கடி சந்தித்துச் சல்லாபகவிகள் பலபாடி மகிழ்வதுண்டு.

மதுரைக்குச்சென்று திருஞானசம்பந்த மூர்த்தி மடாதிபதியைக்கண்டுத் தரிசித்தனர். புலவரைநோக்கி" இருப்பாங்

குன்றத்து வாழ்சிவ சிவபர தேசிகனே" என ஈற்றடி யெடுத்து
க்கொடுத்து மேல் மூன்றடியைச் சொல்கின்றனர்! உடனே
இவர்,— கட்டளைக் கலித்துறை

"பொருப்பரங் குன்றத்து யாவும் நின்பொற்பொலிவினைக்கண்
டிருப்பரங் குன்றத் துமைக்காட்டியா ரெளியன் கொடிய
கருப்பரங் குன்றத் துணைக்காட் கருத்தினுங் காண்பதென்றே
திருப்பரங் குன்றத்து வாழ்சிவ சிவபர தேசிகனே,, எனவே
"கயற்கண்ணி" என்ற எதுகைகொண்டு ஒரு திரிபுசொல்லுக
என்றனர்.

கட்டளைக் கலித்துறை.

"மயற்கண்ணின் மாகர் வழிக்கே வழிப்படு மாண்பனுஞ்சீர்
செயற்கண்ணி நல்வழி சேர்தலென் றேயிருந் சேற்பழன
வயற்கண்ணி கல்சங்கு முத்தின்ற செல்வ மதுரையிலே
கயற்கண்ணி யே பெண்ணைக் காத்தாள்வ தென்றுங் கடனெனக்"

எனக்கூறக் கேட்டுச் சந்தோஷமுற்றுத் தமது திருமடத்
திற்சிலநாள் தங்கியிருக்கும்படி கட்டளையிட்டுப் பின், புலவரது
வருத்தினையறிந்து விசேஷ தீக்ஷைசெய்து உடையவரை எழுந்
தருளிச்செய்வித்துக்கொடுத்தனர். சிலநாளிருந்து அரிதின்
விடைபெற்றுக்கொண்டு திரும்பி பூந்துறைக்குவந்தனர்.

குமரமங்கலத்துமிட்டாதார் செங்கோட்டுவேகவுண்டரைப்
பார்க்க அங்குசென்றனர். தன்கிராமத்துக் கணக்கன் என எண்
ணிச்சரியானபடி உபசரியாமலிருந்ததைக்கண்டு அடியிற்கண்ட
செய்யுட்களை எழுதியனுப்பினர்.

விருத்தம்.

"பானையிலே சோறுதின்பான் சட்டியிலே கறிநுகர்வான் பந்
தியுண்பான், ஆனைத்தின்பான் பூனைத்தின்பான் பலகாரமாப்
பண்ணியரிந்தேயுண்பான், தானமதா கட்கஞ்சா வவனிகொள்
வான் பாப்பரையாய்ச் சைவனென்பான், மேன்மைபுகழ் குமர
மங்கைப்பதமிபன் செங்கோட்டு வேலன்றானே.,,

"தேவடியார் தமைக்காணிற சபிபுகழ் பொலிவாங்கித்தெ
ண்டஞ்செய்வான், ஆவதுடன் வர்க்கமிட காற்கழுவிநீர்குடிப்பா



னடியின்மீதே, தாவளர்கொண் டுருசிப்பா னவர்கவொச்சிற
லை நுகர்வான் குலகோத்திரன், மேவுபுகழ்க் குமரமங்கைப்பத
மிபன் செங்கோட்டு வேலன்றானே.,,

இதனை, வாசிப்பறியாத பார்ப்பனக்குமாஸ்தாக்கள் வாசித்
துக் காண்பித்துப் புலவரைத்தூஷித்தனர் கோபமும் மன்வரு
த்தமுங்கொண்ட மிட்டாதாரர்புலவரை அழைத்து என்னஐயா,
சற்றேனும் தன்னவனென்று அபிமானமின்றி இப்படிப்பாடி
விடலாமா? இதுதான்படித்ததற்கு லட்சணமா? என்றனர்.

அப்படித்தாங்கள் நினைக்கக்கூடாது. நீங்கள்தான் நம்நாட்டின
ன், ஊரினன், நம்மவன் வித்து வானாக வந்திருக்கிறேனே என்ற
அபிமானஞ்சிறிதுங் கொள்ளாது அவமதித்தாய் பார்க்கவும்
இடங்கொடுக்கவில்லை. நானோ இகழவில்லை. புகழ்ச்சியாகவே
பொருள்கொண்டபாட்டுகள் சொன்னேன் என்று உள் அர்த்
தங்களை விரித்துக் கூறினர். மிட்டாதார் மிகுந்தசந்தோஷப்பட்
டார், ஐயா, இப் பாட்டுகள் விஷயத்தில் அதிருப்தி கொண்ட
உங்களைப்பொருள் கூறித்திருப்தி செய்தேனே, நீங்கள் என்
னை அவமதித்திருந்ததற்குக் காரணஞ்சொல்லித்திருப்திப்படு
த்துங்கள் பார்க்கலாம் என்றனர். ஒன்றுங் கூறாது இருந்தனர்
ஐயாவே பெரிய நிலைமையிலுள்ளவர்கள் வாசித்தபெரியோர்க
ளை ஆதரித்துப்பக்கத்து வைத்திருக்கவேண்டும். அது தங்களி
டத்து இல்லையே இருந்திருந்தால் நானேன் பூந்துறைக்குப்
போகிறேன்? வாரணவாசிக் கவுண்டர் விவேகசாலியானதால்,
தம்மூரில் வேண்டுவன உதவிப்பிரியமாய் உபசரித்து வைத்திருக்
கின்றார் என்றனர். சிலநாளங்கிருந்து வேளுக்குறிச்சி மிட்டா
தாரவர்களது அறிவாற்றலையும் வள்ளற்றன்மையையுங்கேள்விப்
பட்டு அங்கே சென்றார். அந்த மிட்டாதாரர் பல கனவான்களு
டன் கூடியிருந்தார். அக்கூட்டத்தைப்பார்த்து ;—

வெண்பா.

"இருமடந்தை நண்ப னியாசைவள நாட
னருவிழியன் வேள்குறிச்சி யாளன்—பாஞ்சேர்
வழிவேலவன் பேரன் வாணஞ் சயன்சே
யெழில்சுப்ப ராய னெவன்."

ஏனுஞ் செய்யுளை ஆரம்பிக்கும்பொழுதே மிட்டாதாரர் எழுந்து வணங்கி இருகைகளையும் ஆரச்சேரப் பிடித்துத்தழுவி ஆசனத்திருத்தித் தாமு மிருந்தனர். உடனே புலவர்,

விருத்தம்.

"சிந்தை மகிழ் நிலைமைசூர்ச் சமஸ்தானத்திற்
செயவில்லை கம்பனியார் செய்யமாட்டார்
அந்த மிகு செஞ்சி தஞ்சா வூர்கோட்டைக்கோ
வாசில்லைச் சேதுவுக்கோ ராணிப்பட்டம்
வந்த வெட்டி யாபுரத்திற் பேட்டியில்லை
மற்றவர்க்கோ கொடை கொடுக்க வளம்போதாது
செந்தமிழ்க்கு வேள்குறிச்சி யொன்றே யல்லாற்
செய்யுதற்கோ வேறிலைமுச் சகத்திற்றானே.

என்றசொல்லக்கேட்டு மிகமகிழ்ந்து பலமாதகாலம் தம்மூரிலேயே இருத்தல் வேண்டுமென்ற மிட்டாதாரரின்விருப்பத்துக்கிணங்கி மகிழ்ந்திருந்தனர். பின்பு கொக்ராயன் பேட்டை மிட்டாதார் பெரியரங்கய கவுண்டரைக்கண்டு;

மெலிந்த பல சினகரமு மதிலு மெழின் மண்டபமும் விளக்கியிந்து, மலிந்த முடியானரி யெண்பந்தனசற் றிருவுருவு மாதேர் கண்டு, பொலிந்தபல சமயமுதி யோருறவு கொண்டுசைவப் புனிதத்துள்ளம், வலிந்தமுள சைப்பெரிய ரங்கயனின் னடை நோக்கி மகிழ்கின்றேனே.

என்பதுமுதலிய பலசெய்யுட்களும் பிரசங்கங்களுஞ் செய்து கொண்டு சிலகாலிருந்து, மிட்டாமானியமாக நிலங்கொடுக்கப் பெற்றனர். அந்தப்பிரதேசங்களிலுள்ள மற்றும் மிட்டாதாரர்களிடமும் மானியம்பெற்றப் பின்பு வேளுக்குறிச்சிக்குச் சென்றனர். அங்கேவரும் புளியங்குடி முத்துவீரக்கவிராயர், வலங்கைப் புலிக்கவிராயர், இன்பக்கவிராயர், மாம்பழக்கவிராயர்முதலிய பல்தமிழ் வித்துவான் களுடன்கூடி அளவளாவி வாழ்ந்திருந்தனர். வேளுக்குறிச்சியிலேயே சிவபெருமான் றிருவடிநீழலையடைந்தனர். இவர் இயற்றிய நூல்கள். கொன்றைவேந்தன்வெண்பா, கொன்றைவேந்தன்மாலை, பூந்துறைப்புராணமுதலியன. காலம் இற்றைக்கு 60 வருஷங்களுக்கு முன் இருந்திருக்கின்றனர்.

---

THE REGISTRAR OF
3- JAN 1915
MADRAS

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# பூந்துறைப் புராணம்.

## பாயிரம்.

### கடவுள் வாழ்த்து.

விநாயகர் துதி.

எண்சீர் கழிநெடிலடி யாசிரிய விருத்தம்.

பொன்னாட்டுத் தேவர்வலம் புரியு மெந்தை
புட்பவனத் தப்ப ரன்பு பூண்டு வாழும்
நன்னாட்டுத் தலத்தின்மா மியத்தைச் சூதர்
நவின்றவட மொழிதமிழால் நவில வேதான்
றென்னாட்டுப் பொதிகைமுனிக் குபதேசங்கள் [வேள்
செயுஞ் சென்னிப் பொருப்பின்மிசை செழிக்குஞ் செவ்
முன்னாட்டுத் துதிக்கையுடன் பேழ்வா யானை
முகத்தேவன் பதமலரென் முடிமேற் கொள்வாம். ௧

வலம்புரி விநாயகன் துதி.

வேறு

கருவி னாயகன் குமார நாயகன்
கருவி னாயகன் கைதொழு தேத்திய
திருவி னாயகன் றேடியுமே வலம்
புரிவி னாயகன் பொன்னடி போற்றுவாம். ௨

காடை விநாயகன் துதி.

வேறு

ஓடைவினாயகன் றுறையினுட் படிந்துதிரு வெண்ணீ றாகந் துபூசி, நீடைவினாயகன் பிறவித் துயரமதை யெப்போது நீக்குஞ் செம்பொற், கோடைவினா யகன்பெற்ற குமர வேண்முன்வந்து குலவுந்தெய்வக், காடைவினா யகன்பதத்தை யெமதுளத்திற் கண்டுநலங் களித்து வாழ்வாம். ௩

செல்ல விநாயகன் துதி.

வேறு

வெல்லு மைங்கர வீரக ணேசனை
வல்லபைக்கு மணாள னெனவருஞ்
செல்ல வினாயக தேசிகன் றன்பதஞ்
சொல்லி வாழ்த்தித் துதித்திடு வாமரோ. ௪

புட்பவனநாதர் துதி.

வேறு

சும்மானைத் திருவிளையாற் சுழன்றேமெ புறஞ்சூழ்ந்து சுழலாற்சிக்குஞ், செய்யானைத் தேடியயர் திருமான்முன் காணாத செம்பொற்சோதி, யம்மானைக் களங்கொடு கந்தகமாடல் செய்வாடன் னகமேவும், பெம்மானைப் புட்பவனப் பெருமானை யெப்போதும் பேணல்செய்வாம். ௫

பாகம்பிரியாள் துதி.

வேறு

மாகம்பெறு தேவன்றுதி வாழுங்கொடி யிடையார்
வேகம்பெறு சேவுந்திய மேவுஞ்சடை முடியார்
நாகம்பணி தோளுந்துகில் நாடுஞ்சிலை மலையார்
பாகம்பிரி யாளின்செய பாதந்துதி செய்வாம். ௬



தான்றோன்றி லிங்கர் துதி.

வேறு

வையநாயகி ஞானம்வளர்க்கு நாயகிபூவின் வளருமெங்கள், தெய்வநாயகி சுரர்கள்தேவநாயகி முனிவர்செழிக்கும் வெற்புக், கையநாயகி முந்நீர்க்கருணை நாயகியிவர்கள் கனிந்துபோற்றுந், தையல்நாயகி யிடத்திற் றான்றோன்றி லிங்கர்பதந் தலைமேற் கொள்வாம். ௭

விசுவேசர், விசாலாட்சி துதி.

நன்னயஞ்சேர் காசியெனும் நதிக்கரையின் முளைத்தோங்கி நவில்வோர்க்கெல்லா, மன்னுபிற வித்துன்ப மாசகற்றிப் பரகதியை வழங்கு மேலாஞ், சொன்னமத்தி பாதாளத் தோர்க்கெல்லா மினியவருள் சுரக்குஞ்ஞானக், கன்னியெனும் விசாலாட்சி விசுவேச ரிருவரையுங் கருத்துட் கொள்வாம். ௮

தக்ஷிணாமூர்த்தி துதி.

முக்கணாச் சுவையுணர்ந்து சுரும்பினங்க ளிசைபாடு முன்னீர்சூழ்ந்த, திக்கணா மலையுருவாய்ச் சிந்திப்போ ரிருவினையுந் தீர்த்துநால்வர், பக்கணான் மறையுணர்ந்த குருவுருவாய்க் கல்லாலின் பக்கம்வைகுந், தெக்கணா மூர்த்திதனைச் சிந்தித்துப் பதமலரைச் சிரமேற்கொள்வாம். ௯

அர்த்தனாரீசுரர் துதி.

யோகமிகுங் கைலையினின் றுயர்காஞ்சி நதிசூழ்கி யுரைக்கும்நல்வே. தாகமம்வா யருணைநக ரழற்கனாயர் தவமியற்றி யன்புகூர்ந்து, தாகமுடன் பூந்துறையிற் சங்கவனை வெயின்மேவித் தழைக்குங்கீழ்பால், நாககிரி தனின்மேவு மர்த்தனாரீசர் ௰
பத நாமுட்கொள்வாம்.

சபாநாயகர் துதி.

வேறு

அருச்சிற்றம்பல மடையமாரனை முன்னெரித்து மன்புபூண்ட, உருச்சிற்றம்பல முடையவகத்தியனு மற்றுமுள் ளோர

ருவப்பத்தேவர், திருச்சிற்றம்பல முடையவோர் படிவமாகியுமே தழைக்குஞ் செம்பொற், திருச்சிற்றம்பல நடனகனகசபா பதி சரணஞ் சிரமேற்கொள்வாம். ௧௧

தாமோதரப் பெருமாள் துதி.

வேறு

தாமோத ரவனைவிட்டி ராக்கதரை வென்றுலகம் நன்றாய்க் காத்துத், தேமோதரஞ் செழிக்கத் தேவர்கள் பூமாரிபெய்யச் செல்வமோங்க, காமோதரஞ் சிலம்பு கலித்திடுநன் மலர்மகளைக் கலந்துவாழுந், தாமோதரப் பெருமாள்பத மலரையெப்போதுந் தலைமேற்கொள்வாம். ௧௨

இலக்குமி துதி.

வேறு

சலக்கு மிழியெனத் தானவர் தங்களைக்
கலக்கு மிருடியாங் காரணன் மார்பினிற்
பிலக்கு மின்றேவர்கள் பேசிப் பதம்பணி
யிலக்கு மிபாதயி ரண்டினை யேத்துவாம். ௧௩

பிரமன் துதி.

வேறு

நன்றவனேம்பிறப் பெண்ணிலாதவை
யூன்பொதியுடலையு முண்டுபண்ணினேன்
றேன்றுளிபூவின்மேற் றெய்வமாய்வரு
நான்முகப்பண்ணவ னற்பதம்போற்றுவாம். ௧௪

வாணி துதி.

வேறு

ஆதிமறை நூல்கள்பல வாகம்மு மோதிச்
சாதிமுதல் நால்வருமா தாபரமும் நீடி
யோதிம மீதேறிவரு மோதுவுடைய நாவில்
நீதிபெரு வாணிபதம் நீடுதுதி செய்வாம். ௧௫



சுப்பிரமணியர் துதி.

கள்ளொழுகு மலர்ப்பொழில்சூழ் குறிஞ்சிநிலந் தனின் மேவிக் கருணைகூர்ந்து, தெள்ளியநன் மணிக்கல்லாற் கவினை நிந்து பரணைநிதித் தினமுமேவும், புள்ளினங்க டனையோச்சிப் புனங்காத்துச் சிறுகுடிசைப் புறத்தில்வாழும், வள்ளிதெய்வா னைக்குரிய மணவாளன் செழுங்கமல மனத்துட்கொள்வாம் ௧௬

சென்னிமலை வேலர் துதி.

வேறு

குளர்கூகை யொடுபேய்கள் குடர்பீறி யிடுராவு குறியாது புலியோடியே, களர்தன்னி லிடுசெந்நெ லதுபோல வெகுலோப கயவர்மேற் கவிசொல்லிநான், றளர்வெய்தி மனநொந்து சலியாமு னடியன்மேற் றயவாகி யருள்புரிகுவாய், வளர்சென்னி மலைமேவு மயின்மீதில் நடமாடி வருகூலி யருள்பாலனே. ௧௭

வீரபத்திரர் துதி.

நத்திரையுங் கடல்சூழ்ந்த ஞாலமதிற் றேவர்களை நடுவிரா வில், நித்திரையில் லாதமரை நேர்நடத்து மாட்டினதுநிணத்தை வேற்கு, வைத்திரையாய்க்கொண்டகெள மாரிதிரி சூலியெனும் வடபாலுற்ற, பத்திரையு மகிழ்வீர பத்திரன்றாளெப்போதும் பணிதல்செய்வாம். ௧௮

வயிரவர் துதி.

வேறு

விதுவுங்குளிர் நதியும்புனை விரவுஞ்சடை முடியார்
மதுவுந்துளி மலருந்தலை மருவுந்தொடை யுடையா
ரதிருங்கழல் முடிவெண்படை யமலன்றல முடையார்
மதுரம்பெறு தமிழும்புனை வடுகன்கழ றனையே. ௧௯

சண்டேசர் துதி.

பண்டேசர்க் கறையெனுந் தீம்பாற்கலசந்தனைக் கவிழ்த் துப் பரிவில்லாமற், கண்டேசற் றுளங்கொண்ட தந்தையின்

ருடனைத்தடிந்து கனிவுகூர்ந்து, மண்டேசர் பரவுதிருக் கயிலை யினி லெப்போது மன்புகூர்ந்த, சண்டேசர் தனைத்துதித்துப் பதமலரை யெப்போதுந் தலைமேற்கொள்வாம். ௨௰

நந்திதேவர் துதி.

வேறு

முந்தியநல் லிங்கரனைக் கொன்றுமுன்னாள் முதலிலிங் தனின்மேவி யாயமாதர், தந்தனத்தைத் தான்றழுவித் தயிர்பால் வெண்ணை தானருந்தி யனேகநாட் டவங்கள்செய்து, கந்தமலர்ச் செஞ்சடிலக் கடவுடனைக் கையிணை லர்ச்சித்துக் கைலைமேவி, நந்தியென வுருவெடுத்த தேவதேவ னளினமலர்ச் செஞ்சரணை நாமுட்கொள்வாம். ௨௧

அங்காளம்மை துதி.

வேறு

வெங்காள மெனவுலகில் வருமறலி தனைத்தூரத்தி விண் ணோர்போற்றப், பங்காள வருஞானப் பரஞ்சோதி யடியார்கள் பவத்தைத்தீர்க்குங், கங்காள திரிசூல கபாலமழு வெல்லாந்தன் கைக்கொண்டோங்கு, மங்காள வம்மையிரு பாதமதை யெப் போது மகத்துட்கொள்வாம். ௨௨

காளி துதி

ஏகசடாதாரிகுறள் கூளிகளிலங்கப்  
பாகரியசொல்லின்மொழிப் பாவையர்கள்சூழ  
நாகசுரமேளமணி நாகமுமுழங்க  
மாகரியகாளிபதம் வாழ்த்துதுதிசெய்வாம். ௨௩

தூர்க்கை துதி.

வேறு

கலையேறி நடனமிடு கடிகூளி யுறவுபெறு கலியாணி சூடுநில மூளாள், நிலமீது மயிடனுடல் பொடியாக வுதைபிடுவள் நிச மீது பொய்களிலையே; சலமாடை யடையபுவி தனிலாசை விடுக



நினை தயவாகி யருள்புரிகுவாய், மலையாள பகவதியி னிருபாத கமலமது மறவாது துதிகள்செய்வாம். ௨௪

மாரியம்மை துதி.

சொன்மாரித் திரிகின்ற வரக்கர்குலந் தனைத்தடிந்து சுரர் கள்வாழ்த்தக், கன்மாரி தனைவிலக்கிக் கவிமாரி பொழிந்தறங் கள் கருத்தின்மேவப், பொன்மாரி பொழிந்திலங்கும் பூமாரி பொழியும்பூர் துறையில்வாழும், நன்மாரி யம்மையிரு பதம்பணி வோர்க்கிருவினையும் நலியுந்தானே. ௨௫

ஐயனார் துதி.

வேறு

துய்யனாரெனுஞ் சொல்லாற் புகழ்ப்பூவை யேதொடுத்துச் சுகமாய்ச்சூட்டுங், கையனார்க் கிருவினையாங் களைநீக்கி யெப் போதுங் கருத்தில்வாழு, மெய்யனார் சுரர்துதிக்கும் விமலனார னரியால் விளங்கவந்த, வையனார் பூந்துறையூ ரையனாரிருபத மும் வணக்கஞ்செய்வாம். ௨௬

அடியார் வணக்கம்.

அலைநாட்டுங் கருங்கடலிற் கலைமிதக்கச் செய்தோனை யகத்தில்வாழ்த்தி, விலைகாட்டி நரிபரியாய்ச் செய்தோன்றன் செழுங்கமல மிகவும்போற்றிக், கலைநாட்டிச் சமணர்களைக் கழு வேற்றுந் தமிழ்முனிவன் கழலும்வாழ்த்தி, மலைநாட்டின் முதலை யுண்ட மகவழைத்தோன் செஞ்சரண மனதுட்கொள்வாம். ௨௭

அவை யடக்கம்.

வேறு

வேதவேதியர் சாத்திரர் சைவமா விரதர்  
ஓதுமாதவர் புராணிகர் வைணவ ருயர்ந்தோர்  
நீதியாளர் நன்மடாதிபர் கவிஞர்கள் நிகழ்த்தும்  
பாதபங்கய மென்றலைமேற் கொளப்பணிவாம். ௨௮

நல்லசூதர் நவின்றிடு காதையை
வல்லமாக் கண்முன்வாய்த் திறந்தோதுத
லொல்லுங் கேழலுழுமிக் கடாம்பொழி
வெல்லு வேழக்கை வெருட்டுதல்போலுமே. ௨௯

உற்றபேதை யுறுமணற் சோறுபோல்
கற்றகேள்விக் கவிஞர்முன் கூறுதல்
சிற்றிலேர்த்துச் சிறார்மனஞ் செய்துகைப்
பற்றல்போலுமென் பாவது வாக்குமே. ௩௰

பாயிரம் கடவுள் வாழ்த்து

முற்றிற்று.

திருச்சிற்றம்பலம்.



உ.

சிவமயம்.

# திருநாட்டுச் சருக்கம்.

ஆடுமாமயி லன்னம் நடந்திடப்
பாடுமாமிசைப் பண்ணினை வண்டினந்
தேடுமாதவர் சிராசலர் பொற்பதம்
நாடு பூந்துறை நாட்டணி கூறுவாம். ௧

வேறு.

மன்னுமேகங்கள் மதன் குடைபோலவான்வயங்கிப்
பன்னெடுந்திரைப் பரவையிற் போய்ப்படிந்துண்டு.
அன்னவன் களிறனையவாய்க்கொண்டரனருள்போற்
றுன்னு நீர்சுரந்தெழுந்தன நாற்றிசைதோறும். ௨

சென்னிமாமலை மீதினில் சென்றெழுந்தோங்கி
மன்னும்வேலவர் மகுடம்போற் பனிரெனவானின்
மின்னி யாங்கவர் முரசென விண்ணிடையதிர்ந்து
சொன்னமாரியா யன்பர்கைப் போதெனச் சொரிந்த. ௩

சாந்த மேவுநற்சென்னிமா மலைமுடிதனில்வாழ்
சேந்தன் மாமுடிக்கன்பினுலெட்டவர் சேர்ந்து
நீந்து கைப்புனற்பாறயிர் நறுநெயும் நிறைத்துப்
போந்து மஞ்சன மாட்டுதல் போன் மழைபொழிந்த ௪.

பாயும் யானையின் பருமருப் பெறிந்தவெண் முத்தும்
வேயின் முத்தமும் விண்ணவர் மணிகளும் விரும்பித்
தோயு நன்முகட் டுச்சியிற் றோன்றிவீழருவி
சேயின் மார்பினிற் செங்கடம் பாரமொத் துளதால். ௫.

மானும் வேங்கையும் வயங்கியமரைகளும் வதைத்துத்
தேனு மேல முஞ்செறிந்திடு கறிகளுந்திமிர்ந்து
போனகஞ்செயும் புளினர்போற் பொருமலைமேவி
வானயாறுதன் வயறு கீண்டொழுகிய வன்றே. ௬

வேறு.

அரியும் வேங்கையு மத்தியுங் கூறுகோ
ளரியும் வேங்கையு மத்தியும் வாரியே
யுரிய மாலையு மாலை முறித்துமே
யுரிய மாலையு மாலையு முற்றதே ௭.

ஆடும் வாழையு மஞ்சுகமும் வரை
யாடும் வாழையு மஞ்சுகம் வாரிமீக்
கோடு வாழைக் குகன்கழ றுழ்ந்துபூங்
கோடுவாழையுங் கொண்டு கடந்ததே. ௮.

ஈயும் பூவு மெருவையுஞ்சாடிநெல்
லீயும் பூவு மெருவையு மேகனற்
காயும் பாலையும் வாரிக்க கனமேற்
காயும் பாலையில் வந்து கலந்ததே. ௯.

ஏரினின்று மெதிர்த்திடு தாருவு
மேரினூறு மெதிர்ச்சரம் வாரியம்
மூரிவாழு முகுந்தன் பதம்பணி
மூரிவாழ்ந்திடு முல்லையில் வந்ததே. ௰.

வேறு.

நன்மலர் மாலை வேய்ந்து நானமும் புழுகும் பூசிப்
பன்மணியாரந்தாங்கிப்பா லுரைப்போர்வை போர்த்து
மன்னவன் போல்வாணி வயங்கிய காஞ்சிநாகம்
பொன்னிசெண் பகமையாறு மருதத்திற் புகுந்ததன்றே.

பண்ணைகள் கால்வாய் கேணி பரந்திடுமிலஞ்சி குன்றங்
கண்ணகன்றிடு மோடை கதித்திடுஞ் சுனைகளெல்லாந்
தண்ணுறுமர் நறுநீர் தேக்கித் தனக்கு நல்விவாசம்பந்த
பெண்ணென முந்நீர் தன்னிற் பிரியமாய்ச் சேர்ந்ததன்றே.



உழவர்களேறு பூட்டு மோதையுமுழத்தி தங்கள்
கழனியிற் குரவை யார்ப்புங் கண்டுசெறுநர்க ளார்ப்பும்
பழமறைமுழவினார்ப்பும் பல்லவர் முழையினார்ப்பு [தோ.
மழைமுழக் குடனீ தெல்லா மாறுகொண் டொலித்தமா

வேறு.

மட்டுவாங்கிய மள்ளர்கள் மதகு நீர்தன்னைக்
கட்டுவார்கறை யேறுவர் கோட்டினூற் கவியை
யிட்டு மாங்கனி யிலாங்கலி பலாக்கனி யிதனைத்
தெட்டிவாங்குவர் தின்குவ ரெருவிடுஞ்சிலரே. ௧௪.

வேறு.

முப்பழச்சாறு பாய்ந்து முதிர்ந்திடு சாலிமுன்னொ
னொப்பிலாமாயன்போலு மோங்கி வானிமிர்ந்து வின்று
தப்பிலாக்குலத்தி போலத் தலையினைக் குனிந்து கல்வி
செப்புவா ருள்ளம் போலச் சிவந்தன சாலி யெல்லாம். ௧௫

வேறு.

உற்ற சாலியை யுன்னித மாகவே
யற்று வீழ்த்தி யடித்துக் குவித்தனர்
கற்ற வாணருங் கைதொழு மேவாருமுன்
பற்று பற்றெனப் பாச்சு மளவையே ௧௬.

பாச்சி னார்கடம் பண்டுசெங் கோலினை
யோச்சி னாரறற் குற்றக டன்கொடுத்
தாச்சு நெல்லை யளந்தவர் சேரினிற்
காச்சி யிட்டனர் கான்வரை போலுமே. ௧௭.

தென்புலத்தவர் தெய்வம் விருந்தினர்
தன்குலத்தவர் தானும் புசித்துமே
நன்பகற்கலை கேள்வியு நாடிமா
வின்பம் பற்றுவ ரெமுழு தெங்குமே ௧௮

பூவி னான்முகப் புங்கவ னன்பினு
லோவி யத்தாக் குயிர்களுண் டாக்கியே
காவில் வாழுங் கருங்குயில் போலப் பொற்
பாவை மாரைப் படைத்தன னூருமே. ௧௯

அன்ன சத்திர மாலயங் கோபுர
மன்ன சித்திர மண்டப மாமடஞ்
சொன்ன பட்டிநன் மண்டபஞ் சூளிகை
மன்னர் மண்டப மாளிகை மேலுமே. ௨௦

வேறு.

மலையெனக்கரிகளேற்றம் வயங்கியபுரவியேற்றஞ்
சிலையினேற்றமெல்லாஞ் சிந்தையிற் கருதி நன்னூற்
கலைகளுங்கற்றுரீகை கருதியேதம்பால் வந்தோற்
கிலையெனுஞ் சொல்லையின்னாட் டினிலெவர் கற்கவல்லார்.

நகர்ப்புறஞ்சாலை தோப்பு நந்தன வனங்கள் கூவம்
பகற் பொழுதகற்றும் பாடல் பயிலிடந்தண்ணீர்ப்பந்த
லிகத்திற்றே வாலயங்க ளிலஞ்சிகோ புரங்க ளெல்லாஞ்
சுகப்பட வன்ன சொன்னஞ் சொரியும்பூந் துறைநன்னாடு.

கொட்டுதல் மேளதாளங் குவிப்பது வளர் செஞ்சாலி
கட்டுதல் கோட்டை யானை கவனவாம் புரவிவெள்ளம்[கள்
அட்டுதல்கருப்பஞ் சாறேஅழித்தல்தேன் பலாப்பழங்
கிட்டுதல் தானதன்மங் கிடைக்கும்பூந்துறைநன் னாடு.௨௨

ஆடுதறோகை மஞ்ஞை யடிப்பது முரசு மூன்றும்
வாடுதல் மின்னார் பக்கம் வளர்ப்பது வேள்வியெல்லாந்
தேடுதலிரப்போர் தம்மைச் சிந்தித்தல் தியானமாகுங்
கூடுதல் பெரியோர் தம்மைக் கோதில் பூந்துறை நன்னாடு

வேறு.

காடெல்லாஞ் சந்தனமே கடலெல்லாம் சந்தனமே
நாடெல்லாந்தேமாவே நகரெல்லாந்தேமாவே



கோடெல்லா மஞ்சுகமே குளமெல்லா மஞ்சுகமே
வீடெல்லாந்திருமாதே மெய்ப்புகழ்பூந் துறைநாடே.௨௫.

காவெல்லாங் கரும்புகளே கழனியெல்லாங்கரும்புகளே
மாவெல்லாஞ் சீனிகளே மடமெல்லாஞ் சீனிகளே
பூவெல்லாஞ்சொல்லுகளே புவியெல்லாஞ்சொல்லுகளே
நாடெல்லா மெய்புரையே நற்புகழ்ப் பூந்துறை நாடே. ௨௬.

வேறு.

அரியயனுந்தேடியரியாத சேர்தியம்மையின் பாலின்னாட்டி
லமர்ந்ததாலுந், தருவுலவு மிந்திரன் பொன்மாரி பெய்யத் தழை
த்தபுகழ்ச்சொக்கேசர் தயவு கூர்ந்து, திருமுகஞ் சேரற்கருளிப்
பாணற்கன் பாய்ச்செம்பொன் மிகக்கொடுத்திடலாற் சிறப்புண்
டாகி, யுரியகொங்கிலிருபத்து நாலு நாட்டுக்குயர்ந்தது நற்
பூந்துறை நன்னாடுதானே. ௨௭.

வேறு.

உன்னிய தெற்கிற்காஞ்சி யுயர் நதிவடக்குவானி
பொன்னிமாநதியே கீழ்பாற் புகன்றிடு மேற்குத் திக்கிற்
சென்னிமாமலையேயாகுஞ் சிறக்குமுப்பத்திரண்டோர்
மின்னுமேல் கரையாய்க்கொண்டு விளங்கு பூந்துறை நன்னாடு.

வேறு.

நற்றவஞ்சேர் பூந்துறைக்குப் பத்துவீடாம் நளினமிகும் வெள்
ளோடைக்கிருநான்கென்ப, கற்றவர் சூழ் நசையனூர்க்காறு
தாகுங் கதித்த வெழுமாதைக்கு நான்கதாகு, மற்றையதோர்
நான்கு சமஸ்தானமாக மனுநீதிதவறாமல் வளங்களோங்கிக்,
கொற்றவர் மெச்சிடக்கொங்கின் நன்றாய் வாழுங் கோதிலாமேல்
கரைப்பூந்துறை நன்னாடு. ௨௯

மூவரையர் பசுபதியாற் கன்புகூர்ந்து முந்தியகோபுரங் கட்டி
முடி நில்லாமற், காவலருமற்றவரும் பிடிமண் வைக்கக் கலசநில்
லாதின்னாட்டைக் கருதிக்கேடி, ஆவலுடனிவர்கையாற் கலசம்

வைக்க வதுநிற்க மூவர்முடியன்பாய்ச்சூட்டிப், பூவுலகிற் கொங்கிலிருபத்துநாலிற் பூந்துறை நாடதிகமெனப்புகன் றிட்டாரே. ௰.

கற்றவர் சூழ் தமிழ் நாட்டில் நாலிலொன்று கதித்திடு நற் கொங்கிலிருபத்து நாலில், உற்றிடு நன்றொன்றாகரையிரண்டா முயராசர்பதி மூன்று வீடு நாலு, மற்றையவைந்தாறு நதியேழதாகு மன்னிய வெட்டொன்பதுபத் திருபத்தேழாம், சொற்றிடுமோர் பத்தெனுமாநகரஞ் சூழ்ந்த தூய்ய தமிழ்ப்பூந் துறைநன்றுநிகரனே ௰௧.

வேறு.

சந்திர சூரியர் வந்துசாளரத்தைக்காக்குந் தழைத்தபொன்னாட் டரம்பையர்கள் சாபமதைத்தீர்க்கு, மந்திகள் மாங்கனி பறித்துப் பந்தடித்து மகிழும் வாழை பலாக்கனிச்சாறு வயலோடிப் பாயுஞ், சுந்தரஞ்சேர் கருநொச்சி வெண்சாரைகாணுஞ் சுனைகளுடன் மாமாங்கச்சுரர் தீர்த்தம்வாழும், புந்திமிகுஞ்சென்னிமலைப் புத்தேட்கு மன்பாய்ப் பூசத்தேர்நடத்திவைக்கும் பூந்துறை நன்னாடே. ௰௨.

மூவரசர் தான்கூடி முடிசூட்டும்வானி முகுர்த்தமிடக்கால்வாய்கள் முந்திவயல்வாயும், பாவலர்கள் கவியதனாற் பனிவிளக்குமுமையாள் பாவமதை விலக்கியர்த்த பாகமதைக்கொடுக்குந், தேவர்கள் பொன்பூமாரி சிறப்புடனே பெய்யுஞ் செய்யதமிழ்க்குறுமுனிவர் செபதவங்கண் முடிக்கும், பூவுலகில் மறையோர்க்கு மதிநிகட்கு மன்னம் புகழ்ந்தளிக்கும் புண்ணியர்சூழ் பூந்துறை நன்னாடே. ௰௩

வேறு.

சங்ககிரிமதிதகிரியரவகிரி மகவைத் தான்கொல்லிகிரிப் பெருமாள்கிரியகஸ்தியகிரியு, மங்களகிரியூராச்சி கிரிதிண்டற் கிரியும் வளர் கன்னிகிரிசெண்பகக்கிரி வெள்ளி கிரியுந், துங்கமிகுங்கனக



கிரி நாககிரி பொதிகைய சூளணியரங்ககிரிரத்தினகிரியுடனே, புங்கவர்சூழ் சென்னிகிரிமேலோங்கிவாழும் புண்ணியகிரி பதினேழ் சூழ் பூந்துறை நன்னாடே. ௰௪.

ஆவலுடன் மறையோருக்கக்கிராரமளிக்கு மகிலாண்ட தீட்சதருக் கடிமைகளுண்டாக்கும், பாவலர்கள்கவிபாடிப்பவிசுமிகப்படைக்கும் பங்கயனு நெடுமாலும் பகவனையர்ச்சிக்குந், தேவர்களும்கவானுந்தின்பகையைச்செயிக்குஞ் செங்கோல் மன்னவர் நீதி செழித்துமிகவாழும், பூவையர்கள் சற்பதனுற்றிங்களின் மும்மாரி பொழிந்தறங்கள் தான் வளர்க்கும் பூந்துறை நன்னாடே. ௰௫.

ஆகச்செய்யுள் பாயிரமுள்பட ௯௫.

திருநாட்டுச்சருக்க முற்றுப்பெற்றது.

## திருநகரச் சருக்கம்.

வேறு.

சென்னிமாமலைச் செவ்வேள்பதத்தினைப்
பன்னிவாழ்த்திப் பவவினைபோக்கியே
நன்மைப் பூந்துறை நாட்டணி கூறிப்பின்
மன்னுமன்னகர் மாநலங்கூறுவாம். ௧.

வேறு.

மன்னியகோட்டை பேட்டை வழங்கொள்மாநகரமோங்குங்
கன்னியராடல் பாடல்கதித்த வாத்தியமுழக்க
முன்னு பூரணகும்பங்களுபார்ந்ததோரண மேற்கட்டுக்
கன்னல்சேர் வாழைக்கம்பங்கட்டிமாமணங்கள் செய்வார். ௨

நாட்டுந்தேவாலயத்தி னல்லதுந் துமிமுழக்கம்
வீட்டின்மா மணமு ழக்கம் விரும்பிய வரசர்வீதி
காட்டுநன் மதமாச் சேனை கவனவாம் பரிமுழக்கம்
நீட்டிய பரவைபோலென்றிராப்பகல் முழங்குந்தானே. ௩

வேறு.

அறிதிவரக்கண்டெழுந்தா சனமுதவிச்சாட்டாங்க மடியில் வீழ்ந்த, பரிவோபாங்காதரச்சனை யோடருக்கியமாசமன முதல் மகிழ்வாய்ச்செய்து, புதியதயிர் நெய்பாலோடனமளித்து விரு

ந்தினர்க்குப் புகட்டிப்பின்பு, பதிமனைவியுன்பரிந்தப் பதிக்கு
நிகர்பொன்னகரைப்பகரலாமால். ௪.

வேறு.

அந்தணர் வீட்டில் வேதமரசர்தன்வீட்டில்வீர
தந்திரம் வணிகர்வீட்டிற் றனங்கள் காத்திடுதலேரை
முந்தியவுழவர் வீட்டில் மூவருமுக மன்கூறி
வந்துகாத்திடுதலிந்த வளநகர்க்கிணை யுண்டாமோ. ௫.

சொல்லிய மடவாரெல்லாந் துணைமுலைக்கற்பைக்காப்பர்
நல்லியற்கவிஞரெல்லாம் நராதிபர் தன்னைக்காப்பர்
வில்விசைமாக்களெல்லாம் வீரத்தைக்காப்பர் மேலாய்ப்
பல்பலமாக்களிந்தப்பதிதனைக்காப்பரன்றே ௬.

அம்பரமளாவு மாடமதிற்று திற்பதாகையாடற்
செம்பியன் வழுதிசேரன் சேர்ந்தமுக்குலத்துளோரில்
நிம்பமாலிகையான்கொண்ட நிரைமுடிதருவேனென்றே
உம்பர் கோன்றன்னைக்கையா லுவந்தழைத்திடுதல் போ
[லாம். ௭.

வேறு.

பருப்பதம்போ லுயர்ந்தநகர் தன்னில்வாழும் பண்புடையார்
மணஞ்செய்யப் பரிவுகூர்ந்து, விருப்பமுடன் மணமுரசையடிப்
பச்சாதா மிருகங்கள் மழையெனவே விரைவிலோடித், தருக்
குலங்கள் தனிமேலேறி முகில்பார்த்தையந் தனைவிலக்கிச்சந்தி
யார் மணமென்றெண்ணி, யுருக்கொடுமாங்கனிவாழைக் கனி
பலவின் கனியுமுடனளித்துநடனமிடு முயர்ந்திடும்பூந்துறையே

வேறு.

மேனிலை யதனிலூடல் விளைந்திடு மடவார் முத்தைக்
கானில் வெண்குன்றி யென்னக் கைகளாலுதிர்த்துவாரி
வானின்மேலெறியவண்டன்மண்ணினிற் பதிந்து வைகும்
பானிலாவிண் மீனென்பார் பழங்கதையறியார்தாமே. ௯.

அந்தணரன்பாற்செய்யு மருகப்புகையும்பாரில்
வந்தவர் தமக்குப்பாகம் வழங்கியபுகையுமொன்றாய்
முந்தியமேகத்தோடே முயங்கியானிவர்ந்துதேவர் [தூர்.
துந்துமிமுழக்கம்போற்பொன் சொரியும்பூந் துறையாமூ,



பரவுவெண்மணியிற்கூடும் பதக்கமாம்மவயிரந்தன்னை
விரவிய மடவார் விண்ணின் வீசவெண்மணியாம்தூலின்
வரவுமேலறி யாரிந்த வண்சுடர் தன்னைப் பாரி
லிரவியேயென்பார் முன்னா ளிந்நகர்ச்சிறப்பையோரார். ௧௧

திருநகரச் சருக்கம் முற்றும்.

ஆகச்செய்யுள் ௭௬.

## புராணவரலாற்றுச் சருக்கம்.

பற்பலவளங்கள்சூழும் பனிமதிதவழும்சென்னி
வெற்பினில்மகிழ்ந்துவாழும் வேலவர்பதத்தைப்போற்றிக்
கற்புடைமகளிர்வாழுங் கடிநகர்வளங்கள்கூறி
நற்றலப்புராணம்வந்த நலத்தினைச்சிறிதுசொல்வாம். ௧

வேறு.

புவியதனில்நைமிசாரணியந்தன்னிற் புண்ணியனுஞ்சூதமுனி
புகலக்கேட்டுச், சவுனகருமுளமகிழ்ந்துகைகள்கூப்பிச் சார்ந்த
பன்னீராண்டுபல வேள்விசெய்து, திவியமெனுந்தலமோராயிரத்
தோரெட்டிற் சிறந்ததத்துவிதத்தலம் யாதென்றுகேட்கச், செ
வியமுதம்போற்கொங் குவளநன்னாட்டிற் சிறந்ததுநற் பூந்துறை
யாஞ்சிறப்பின்மிக்காய். ௨

வேறு.

காசிதிருக்காளத்தி காஞ்சிமதுராபுரிநற் கயிலையாதி,பூசிக்குந்தல
மெல்லா மிரண்டல்லா லொன்றில்லைப் புகலக்கேளீர், யோசிக்கு
ம்போதுதொண்ணூற்றாறுதத்வ மதுவன்றென் றோர்ந்துதம்மு
ணசிக்கும்பரம்போலச் சிவன்சத்தியொன்றாகி நீங்குமூதூர் ௩.

வேறு.

அதுவுண்டாங்காரணமே தென்னமுன்னா ளயன்கயிலை தனக்
கேகியன்பால்வேதத், துதிசெய்யப்பரமன்முக் கண்ணுஞ்சோம

சூரியாக் கினியெனவேசொல்லத்தேவி, பதுமமலர்க்கரத் தாற்க ண்மூடச் சொற்கபாதாளமத்தி யிருட்பரந்துசூழ்ந்து, மதிமயங் கிய மீனகசதுர்யுகங்களாகி வானவர்மண்ணோர் முனிவர் மயங்கி னரே. ௪

முக்கண்ணால்வரும்பவங்கள்தீர்ப்பதற்கு முதற்காஞ்சிநகரண் ணாமலையாங்கொங்கிற், றிக்கிலுயர் பூந்துறைநன்னாட்டின்மேவிச் செழும்புனல்வெங் கனல்வெயிலாற் சிறந்துவைகி, மிக்கவிருபத் தொராயிரவருடந்தவங்கள் மிகச்செய்துவரும்பவங்கள் விரவி ற்போக்கிப், பக்கமுறுஞ்சிவசத்தியொன் றுய்க்கூடிப் பலன்றரு மிப்பதியெனவேபகருமாயால். ௫

முன்னுரைத்தபதினெட்டுப்புராணந்தன்னின் மொழிந்ததிஃதி யாதென்று முனிவர் கேட்கப், பின்னுரைப்பான் சிவபுராணங்க ள்பத்திற் பேசியநற்காந்த சமுத்திரத்திலுண்டா, மன்னியநல் லீசுரசங்கிதையிற்றேவி மருத்துவத்திலுண்டான வன்மையெல் லாம்; கன்னலுறும்பாகினிற்கற்கண்டேபோல கழறினர்சூத் சவுனகர்க்குத்தானே. ௬

வேறு.

கும்பமுனிகாலமதின் கொள்கையினையோர்ந்தே
வம்புவியிற்றேவர் மொழியால்விளம்புகாதை
நம்பனருள்மேவுசிவ வாலயருக்காக
வும்பர்மகிழ்நற்றமிழினாலேயுரைசெய்தார். ௭

நற்பெருங்கதையையன் னாட்டில்வாழாசர்கள்
சொற்பெறுங்கவியினாற் சொல்லுகென்றனர்
உற்றிடுசருக்கமொ ரொருபதாக்கிநற்
பற்பலசந்தமாய்ப் பாரிற்செய்தனன்.  ௮

புராணவரலாற்றுச் சருக்கம்

முற்றுப்பெற்றது.

ஆகச்செய்யுள் அச.



# உமைதவச் சருக்கம்.

வேறு.

மைதவழ்சிராசலத்தோன் மலர்ப்பதம்பணிந்துபோற்றிச்
சைவமாம்புராணம்வந்த சார்புரைத் துமையாள்முன்னாள்
வையகத்தாசைமேவி வளர்சங்க வனத்துள்வைகிச்
செய்தவந்தன்னைப்பற்றிச் சிறியியான்சொல்லலுற்றேன். ௧

தென்னவன் றனக்குச்சேயாய்த் திங்களின்குலத்திற்றோன்றிப்
பன்னுமிவ்வுலகிலுள்ள பலவுயிர்தம்மைப்பெற்ற
வன்னையாம்ஞானச்செல்வி யழகுயர்கயிலைவெற்பில்
மன்னவனுடனேகூடி மகிழ்ந்தினிதிருக்குநாளில் ௨

இந்திரன்முனிவோர்வானோ ரிலங்குகாந்தருவர்பூதர்
மூந்தியவயன்மாலுள்ள முப்பதின்மூவர்கூடி
நந்தியாக்கினைக்குண்மேவி நன்மலர்பதத்திற்றாவிப்
பந்தமாந்தொடக்கறுத்த பரமனைவணங்கிக்கண்டார். ௩

நற்பெருஞ்சபையில்வாழும் நான்முகப்புத்தேள்வேதச்
சொற்பெறுதுதியால்மூன்று சுடர்களுந்தேவதேவ
னற்புதநயனமாமென் றறைந்திடமலர்க்கையாலே
வெற்புறுமுமையாள்மூட விருண்டனவுலகமெல்லாம். ௪

அங்கையாற்கண்ணைமூடி யன்புடன்வாங்குநாளிற்
செங்கண்மால்தனக்குப்பட்டுஞ் சிதைந்தனகோடிகாலம்
பங்கயன்வானோரற்றுப் பருதியுமழுங்கிச்சோரு
மங்கண்மாஞாலங்காக்கு மம்மையும்வெருவலுற்றாள். ௫

நம்பனாற்சாபம்பெற்று நக்கெனுங் காஞ்சிமேவிக்
கம்பையாறதனின்மூழ்கிக் கதித்திருபத்தோராயி
ரம்பெறுவருடலிங்கம் நன்மணலொன்றுண்டாக்கிச்
செம்பொன்மென்மலராற்பூசை செய்தினிதிருக்குநாளில். ௬

மான்மழுக்கபாலசூல மருவியகாளகண்டன்
தான்பணிபூடணங்கள் தழைத்தமுக்கண்ணனாகி
யான்மிசையெழுந்துமுன்னா ளம்மைசெய்யிலிங்கத்துள்ளே
தேன்பொழிசடையர்வந்தேன் றத் திகைத்துளமகிழ்வதானாள் க.

பங்கயன்மாலுங்காணாப் பரமனைபோற்றியெந்த
னங்கையால்வரும்பாவங்க ளனைத்தையுந்தீர்ப்பாயென்று
செங்கையாலர்ச்சித்தாச மனமருக்கியமுஞ்செய்ய
நங்கைநீயிரண்டிடத்தில் நற்றவஞ்செய்யுமென்றார். அ.

கண்ணொருமூன்றுமுண்டாங் கடும்பவமொன்றுநீர்ந்த
துண்மகிழ்ந்தருணைமேவி யொளிவிடுங்கனலில்வைகி
யெண்ணியவருடமுன்போ லெழிற்சிவபூசைசெய்தால்
மண்ணின்மேல்வந்துதோன்றி மகிழ்வரங்கொடுப்பேனென்றார்

வேறு.

உரைத்துவானி லொழிந்தனர்வாரிசூழ்
தரைத்தலத்தரு ணாசலமேவியே
வரைக்குலக்கொடி மாதுகனற்கண்முன்
னுரைத்தகால முயர்தவமெய்தினாள் ௰.

அன்னபான மகற்றியிரேசக
மன்னுபூரக கும்பகமேற்றியே
சொன்னவாயுப்பி ராணயமேசெய்து
என்னுமிட்டையி லெங்குமிருந்தனள். ௰க.

சிற்பரானந்த தேசிகனன்புகூர்ந்
தற்புதத்தி னருள்வடிவாகியே
சொற்கமத்திபா தாளந்தொழுதிடக்
கற்சிலைக்குளே கண்ணுதன்மேவினார். கஉ

கண்டுமாது கனிந்துகைகூப்பிமேற்
கொண்டுசங்கர சம்புகுணாகர
கண்டநீலக் கடவுளாவெனத்
தெண்டஞ்செய்தனள் தேவரும்வாழ்த்தவே. கங.



ஒன்றுகூறுவ னேங்கு முன்னுளினி
லன்றிராக்கதரானவாதாவியாந்
தன்றுணையின தாவியிவர்புவி
வென்றுமானிடர்மெய்வதைகோறினார். கச

சம்புமாரிஷிதான்செய்யும்வேள்வியி
லம்புகார்முகமாயுதபாணியாச்
செம்பொன்மேனி சிவப்பமுனாலுட
னம்புவிக்குளாசனுந்தோன்றினான். கரு

வேறு.

தோன்றும்வாதாவியெனுமினதாவிதொலைத்துநல்லுலகெலாம் புரக்கும்,வான்றவமுடையோனக்கினிச்சேரன் வாழ்ந்திடுங்கொங்குநன்னாட்டிற், றன்றவம்பெறும் பூந்துறையெனும்நகரிற் சங்கமாவனம்வெயின்மேவி, யான்றமுன்னுரைத்த விருபதினோராயிர வருடந்தவமியற்றும். கசு.

சொல்லிவான்மறையவரைக்கொடியனேகஞ் சூழ்ந்திடுஞ்சத்திகளுடனே, கல்லுநாடதனைக் கருதியேவருந்திக் கணேசனுமுன்செலக்கண்டே, யல்லலற்றிடவோர் நதிகளுண்டாக்கென்றறைந்திட வவ்விடத்தமைக்கச், செல்லுவாளவிடந் தீர்த்தமுங்கண்டு சிந்தையுமகிழ்ந்ததிற்படிந்தாள். கஎ.

அம்மையோர்வாக்காலமைந்திடுங்கீணீர்துவொருவாக்கினாறுகுங், கம்பைமாநதியுஞ்,சோணமாநதியுங், கருதியபலனெலாங்கொடுக்குஞ், செம்பியன்வழுதி சேரர்கோன்மூவர் சிறந்தபொன்னாட்டினையெய்தி, யும்பர்கோனலமுமுறுவரித்தீர்த்தமுரைத்தனரனேகசத்திகளே. கஅ.

அனேகசத்திகளுமதிற்படிந்தெழுந்தே யம்மையுமிலிங்கமொன்றமைத்துச், சினேகமாங்கோட்டுப் பூவுடன்கொடிப்பூச் சிறந்தநீர்ப்பூநிலப்பூவு, மனேகமாய்நின்றுசாத்தியட்டாங்கத் தவத்தினைமருவுநாட்னில்விற், பனேகருமகிழ்ந்து பதத்தினைப்போற்றப் பத்தியாத்தவஞ்செயுங்காலை. ககூ

அழகுறுகாமவல்லிமேற்பட்டர்ந்த வைந்தருநீழலினமையு,மிளமைசேர்சசியோடிந்திரன்மேவ வெய்துகாந்தருவர் கின்னரர்கள்,

பழமைமேனகையா ஊர் வசியரம்பை பகர்திலோத் தமைகளு மேவி, நளினமாம் நடனநாட்டியவவையில் நடந்தனன்சுரர்குரு வென்பான். ௨௰

இவர்தமைக்கண்டு வெழுந்திலாளரம்பை யினியநல்லுரு வசியிவரை, யுவரிசூழ்புவியிற் கொங்குநாடதனி லுயர்திருப் பூந்துறைநாட்டின், நவமணிகொழிக்கு முத்தமாநகரினடப்பயில்முத்தியின்வயற்றி,லவமுறுமிரட்டைவடிவதாய்ப்பிறவென் றறைந்தனன்சாபமேலறைவான். ௨௧

இப்படிச்சாபமறைந்தனன்மின்னுளெழுந்துகைகூப்பிமண்மீதிலொப்பிலாத்தேவேசுரர் குருவெனநானுமையுமறிந்திலையுவகிலிப்பிழையொறுத்தே யென்னையுங்காப்ப தெதிகடன் கடனென வியம்ப, வப்பணிச்சடையாற்கன்பனுமுவந்தேவதிகநல்வரங்களுங்கொடுத்தார். ௨௨

உன்னுறைநகரிற்குசியாய்ப்பிறந்து முமையவட்பாகனைத்தொழுது, பன்னிரண்டாண்டிற் பாகசாதகனனும் பகரயிராவதத்தேறியன்னகர்வதியப் பொன்மழையுடனே யலர்மழையதனையுஞ்சொரியும், நன்மணம்பெறுவீர் பொன்னிநாடடைந்து நலனுறுபலன்களுமாமால். ௨௩

குருமொழியதனற்புவியினன்னகரிற்கோதிலாத்தாசியின்வயிற்றி, லிருவருருவாகிப்பிறந்துசின்னுளி லியாவற்குமினியநல்லவராயொருதினந்தன்னின்முன்வினையதனு லுயர்சங்கவனமதிலெய்தியருமையாயுமையாடவஞ் செயக்கண்டு மனேகவந்தனைகள்செய்தனரால். ௨௪

மண்ணினிற்பிறந்த பெரும்பவந்தீரவனிதையரனெகநல்லிசையாற், பண்களைப்பாடிபரதநாட்டியங்கள் பலபலவிதத்துடன்புரிந்து, கண்களுங்குளிரக் கருணைநீர்பெருகிக் கையினலருக்கியமளித்துப், பெண்களுக்கரசி யெங்களாட்கொண்டபெருமையையாரெடுத்துரைப்பார். ௨௫

இப்படியனேக வந்தனைபுரிந் தமெழில்சங்கவனந்திலெய்து, மொப்பிலா வுமையாளிருபதம்போற்றி யுவந்தினிதருக்கு நாட



ன்னிற், றப்பிலா ப்பிரமன் மாதவன்வலாரி தழைத்திடும்தேவர்களெல்லா, மப்பணிச் சடையாருள் பெறுங்கயிலைக்கன்புடனெழுந்துசென்றனரே. ௨௬

கண்ணுதல் வாழுங் கைலைமாமலையைக் கனிவுடன் கருத்தினிற்போற்றி, யண்ணறன் பதத்திற்சென்று வீழ்ந்தெழுந்தேவங்கைகள் கூப்பிவாய் புதைத்துப் பண்ணிநாற் பாடிச்சலந்தராசூரன் பகைதனை செமிததிடப்பாரி, லெண்ணிலா வாயுதங்கொடுத்தருள் விரென்றனர் நான்முகன் முதலோர். ௨௭

வேறு.

வெள்ளி மாமலை மீதிலமர்ந்திடும்
வள்ளலார் திருவாய் மலர்ந்தோருரை
விள்ளுவார் திரிலோக சஞ்சாரமேற்
கொள்ளுவேன் வகை தீர்ந்திடக் கூறுவேன். ௨௮

நாதனாரு கூறவெண்ணட்டத்து
வேதனார் முதல் விண்ணோரனைவரும்
பாதம் போற்றிப் பகையறுப்பரெயன
காதன் மேகிக்கடி நகரெய்தினர். ௨௯

வேறு.

உற்ற சூரனுயர்வரம்
பெற்றதாற் சினம் பேணியே
நற்றவத்தினர் யாரையும்
பற்றிக்காவல் படுத்துவான். ௩௰

வெள்ள முருமிறைச்சியுங்
கள்ளுஞ் சோறுங் கைக்கொளென்
றுள்ள நாணியுருகிடக்
கொள்ளுகொள்ளெனக் கூறுவார். ௩௧

இந்தவாதைக்கிமையவர்
சிந்தைவெந்து சிவந்திட
நந்தி யேறிய நாதனார்
வந்துதோன்றினர் வையமே. ௩௨

வேறு.

வெள்ளிமாமலைபோன்மேனி விளங்கிய விடையிலேறிக்
கள்ளருக் கடுக்கை தும்பை கடிய செஞ்சடையிற் சூடும்

விள்ளுமான் மழுக்கபாலம் விரைந்திடு சூலந்தாங்கி
உள்ளுவார் உள்ளமேவுமுயர். சிவலிங்கத்துள்ளில். ௩௩.

வேறு.

வரைக்கொடி முன்றவஞ்செய்த வருமை கண்டு மாதவத்தோர் தன்னுடனே வையந்தனில், நிரைக் கொடியோன்முன் வருகக் கைகள் கூப்பி நீண்ட பணிப்பூடணனே நிமலாபோற்றி, விரைக்கமலப் பொகுட்டோனுமாலுங் காணாவேதியனே கொன்றையணி விமலாபோற்றி யுரைத்திடலு முளமுருகி விழிநீர் பெய்து வுற்ற வல்லிக்கொடி யெனவே யொத்து நின்றாள். ௩௪.

கங்கையணி செஞ்சடா மகுடா போற்றி கண்ணுதலே திரிசூலகபாலா போற்றி, செங்கை மழுமான்றரித்த சிவனேபொற்றி சிற்பரானந்தகுணதேவா போற்றி, பங்கயனு நெடுமாலுமருச்சித்தேத்தும் பற்றற்றோருள்ளங்குடியாம்பரனே போற்றி, மங்கள கல்யாண பூண மகிழ்நாபோற்றி மாதவத்தோர் போற்று சிவமணியேபோற்றி. ௩௫.

நான்வேறாயிருந்ததனாற் பவங்கள் சூழ்ந்து நானிலத்தில் வெகுநாளாய்த்தவங்கள் செய்தேன், தேன்துளிக்குங் கொன்றையணிச்சடையாய் செம்பொற் சிலையை யொருசிலையாக்குந் தேவதேவ, மான் தரிக்குங் கரதலனே வாமபாகமகிழ்ந்தெனக்கு மிப்போது வரந்தந்தாள்வாய், மீன் குதிக்குந்தடம் பொய்கை கொங்கு நாட்டில் விண்ணவர் பொன் பூமாரி விளங்கத்தானே.

வேறு.

என்று கூறுமிறைய வட்கெண்ணிலாக்
கன்றை வாரிக் கனியுகுத்தோன் றொழு
மன்றுளாடி மகிழ்ந்திடப்பாகம்வா
மென்று நாம மியற்றினன் பாரினில். ௩௭.

பின்னுங் கூறுவன் பேணியின்னுட்டினில்
பன்னு நாகப்பருப் பதத்துச்சியிற்
துன்னிவாழுஞ்சுரர் நதி மீதினிற்
பொன்னந்தாமரைப் போதிடம்வைகியே. ௩௮.

ஈண்டு முன்போலிருபத்தோராயிரத்
தாண்டு மேவித் தவமது செய்திட



வேண்டுமென்று விளம்பினன் மெய்த்தவப்
பாண்டியனென்னப்படைத்த பெயரினன். ௩௯.

சொன்னபோதுமை சோர்ந்துளம்வாடியே
பன்னகாபரணப்பகவான்றனை
யுன்னி வாழ்த்தி யுவந்தடி போற்றிடப்
பொன்னின்மாரி பூமாரி பொழிந்ததே. ௪௰.

இந்திரனயன் மாலு மிமையவர்
கந்த மூலங் கருதிய்தாபத
ரந்தரந்தனிலாடு மரம்பையர்
முந்து தேவர் முப் பத்துமுக்கோடியே. ௪௧.

சென்று நாகச்சிலையினிலேறியே
நன்று பச்சிம நானில நாட்டமாய்க்
கன்றுபோலக்கதறி மைந்நீலமாங்
குன்றுபோலக் குலாவியிருந்தனள். ௪௨.

175429

உமைசவச் சருக்கம்.

முற்றும்.

ஆக்செய்யுள் ௧௨௯.

## சலந்தராசுரச்சருக்கம்.

கார்பொழிற்சிராசலத்திற் கந்தனைப்பணிந்துபோற்றி
ஏர் பெறுமுமையாண் முன்னுளியற்றிய தவத்தைக்கூறி
பாரினிற் தேவர்தம்மைப் படுஞ்சிறையடைத்தேயாண்ட
சீர்பெறு சலந்தரன்றன் செய்தியை யுரைக்கலுற்றாம். ௧.

பொற்றொடி மடந்தைதன்பாற் பூப் பெணப்புணரி தன்னிற்
சொற்றிடு மூவரேபோலத் தப்ப் சோணாட்டிற் சேர்ந்த
விற்குடியதனில் மேவுமிராக்கதக் குலத்திற்றோன்றிச்
சற்குணஞ் சற்றுமில்லாச் சலந்தரா சுரனென்பான். ௨.

தேவரைச்சிறையில் வைத்தான் சிந்தையிற் றரும மோரான்
மூவரைச்சற்று மெண்ணான் மூவுல கொருங்குமாள்வான்
பூவையர் தம்மைக்காணிற் புணர்ச்சியை மனதிலெண்ணும்
பாவபுண்ணியத்தைத்தேரான் பரமசண்டாளனென்பான்

வேறு.

காலினுந் கடலேலெழுயு மெற்றுவன் கையால்
கோலமாமழையேழையும் பிசைந்துறக்குடிப்பான்
சாலவேழ் மலை தன்னையும் பந்தெடுத தடிப்பான்
பாலவெண்மரைப்பிசைந்து மெய் நீறிடப்படுவான். ௪.

உலகில் யாவருமவன்க ழலேவனுக்குற்றுர்
கொலையும் பொய்மையும் வஞ்சமுமவனிடங்குடியா
மலகிலாப் பெருப்பவமதைப்புணர்ப்பவனுனன்
கலையும் வேதமுங்கற்றுமே கற்றறி வில்லான். ௫.

தந்தைதாயரைக்குரவரைச் சதித்திடச் சலியான்
வந்தமாபெரும் பூதங்களெந்துமே வணங்குஞ்
சந்தராதித்தர் முனிவருங் கண்ணடை சாரார்
இந்தமா நிலத்திடரினைத்தீர்த்திடு மெந்தாய். ௬.

என்று கூறிய விமையவர் தங்களுக்கிசைந்து
நின்று கீட்டிசை நோக்கினர் தவங்களுநிலைக்க
நன்று நன்றெனப் பூதங்கள் கைகொட்டி நடக்க
மன்றுளாடியும் வளைந்தனர் நகர்ப்புறமதிலே. ௭.

சுற்றும் காளையிற் சூரனுக்கிடப்புறத்தோளு
முற்ற கண்களுந் துடித்தன மந்திரக்குளைப்ப
வெற்றிமேவிய வீரமுஞ் செல்வமும் விருது
மற்றதாமென மந்திரத்தலைவர்களறைவார். ௮.

வேறு.

மந்திரத்தலைவர் யாரும் வாயில் விட்டகலா முன்னம்
நந்திபோர் தூதனுக நற்றிரு முகமுங்கொண்டு
வந்தனனென்றுன் சூரன் மனந்திடுக்கிட்டு வாய்கா
தெந்த ஊருன்கோ வுன்பேரென்னெனக் கயிலை நந்தி. ௯.

திருமுக நீட்டவாங்கிச் சிந்தையி லுணர்ந்து சூரன்
மருமுகமாகிச்சேனை மந்திரத்தலைவர்க்கோத
வொருமுகமாகிச்சண்டைக் குறுவதே கடனென்றுன்னி
வருபவர்க்குரைத்தானந்திவந்ததும் விழுத்தலுற்றுன். ௰.



வேறு.

விடைக்கொடியோன் கடைக்காலத்திடியேபோல வெருண்டிரண பேரிகையை விளங்கச்சாற்றிப், படைத்துணைவருக வருநந்திக்கண்ணுட்பட்டம்வைத்துக்குறட் பூதம் பசாசு சேனை, தடைப்படாதாயிரத்தை நூறு வெள்ளந் தானிரட்டியாயுதங்கள் சாற்றிருணுது, குடைப்பிடித்த குறளினுக்குச் சமானமானோர் கூறினதற்கதற்றிரட்டி சூரன் சேனை. ௰௧.

வேறு.

பிடிப்பார் பலைக்கடிப்பார் குடல் பீறிச்சில செந்நீர்
குடிப்பார் தலைதுணிப்பாருடல் குறிப்பாயின குறட்பேய்
படிப்பார் பதம் பிடிப்பார் தட்டம் பறப்பார் சில சூரர்
துடிப்பார் சிலர் வெடிப்பார் சிலர் சுழல் சூரர்கள் படையே.
குடலற்றனருடையற்றனர் குணமற்றனர் குறுகா
நடையற்றன ருடையற்றனர் நகையற்றனர் புவிமேல்
விடையற்றனர் படையற்றனர் விருதற்றனர் நிருதர்
குடையற்றனர் பகையற்றனர் குவியப்பிணமலையே. ௰௨.
கண்டான் சலந்தரனும் மனங்கலங்கிக் கடிதேகி
விண்டானுயிர் மடவார்களும் விரவிக்கா புறமேற்
கொண்டார் குழல் சரியத்தரல் கூ கூ வெனக்கூறிப்
பண்டாகிய வெம கீதமும் படிப்பார் மனத்துடிப்பார். ௰௩.

வேறு.

சூரனுங்கலங்கி வேறுய்ச் சொற்புவி யதனில்வாழும்
வீரருக்கெல்லாம் மோலை விவரமாயெழுதி விட்டான்
சாரமுந்தெரிந்து மற்றோர் சகலருங்கூடிக்காலை
நேரமே வந்தார் சூரனைமலைபோலநின்றுன். ௧௫.

வந்தனர் வணங்கச் சூரன் மணிமதிட் கோயில் புக்கிச்
சந்தனம் பனிநீர் நானந்தகு நறுமணங்கள் பூசி
சிந்தூர திலகந்தீட்டிச் சிறந்த நற்சட்டையிட்டு
சுந்தர மகுடமாதி துகளினன் மணிப் பூண் பூண்டு. ௧௬.

மாகதர் புகழ முன்றின் மன்னுதேர் மிசைமேற் கொண்டு
சாகர மெழுந்த தென்னச்சத்தமிட்டவுணச்சேனை.

மாகமுஞ் செவிடுகொள்ள மலர்க்கரங்கொட்டியார்ப்ப
வேகமாய்ப் போர்க்களத்தை விடுத்தப்புற நோக்கினானை
செருக்குடனெதிர்ந்து வீரத்திறலுடனெதிர்த்தான்றன்னை
மருக்கமழ் கொன்றைவேய்ந்தன் மனத்தவமதிப்புற்றுத்தம்
திருப்பதமதனால் வட்டஞ் சேர்ந்துறத்தரையைக்கீறி
உருப்படுந்திகிரி பார்த்திவ்வுணர் விலான்றலைபோக்கொன்றான்.

வானவரவுணர் மற்றைமன்னுயிர் நடுக்கங்கொள்ள
மாநிலங்கிழிந்த வலியசக்கரமெழுந்து
மேனிமிர்ந்தெழுந்தவன்றன் வெஞ்சிரமறிந்தேதம் மண்ணல்
பூதிகர் திருக்கரத்திற் புகழுற வமர்ந்த தன்றே. ௧௬.

வெந்திறல் சூரன்மாய வேதியன் முதலோர் வேத
மந்திர மதனாலீசன் மலர்ப்பதமதனைப்போற்றித்
தந்திடு மிறைவிமுன்னாட்டவஞ்செயும் வனத்தைச்சார்ந்து
துந்துமிமுழக்கஞ்செய்யச் சுரர்கள் பூமாரிபெய்தார். ௨௰.

சலந்திராசுரச் சருக்கம் முற்றும்.

ஆகச்செய்யுள் ௧௪௧.

௨.

# தேவர்கள்பூசைச் சருக்கம்.

பங்கயன்றன்னைமுன்னாட் படுஞ்சிறைவைத்தீராறு
செங்கையால்வேலெடுத்த கிராசலன்றன்னைவாழ்த்திப்
புங்கவர்முதலாயுள்ளோர் புகல்சலந்தரனைக்கொன்று
சங்கரனவனத்தில்வந்து தான்செயுஞ்பூசைசொல்வாம். ௧.

மன்னியநல்விநாயகதீர்த்தத்தின்கீழ்பால் மகிழிந்திர தீர்த்தமதிற்சவ்வாதுவிசு உன்னிதயாயதன்வடக்குப் பிரமதீர்த்தமுமர்சண்பகத்தீர்த்த முயர்ந்தேவாழும், இன்னிலதிலதன்வடக்குவிஷ்ணுதீர்த்தமியற்பெயரோ சக்கரதீர்த்தங்களென்பார், பின்னுசிவதீர்த்தமதன் வடபால்வைகுப்பிறங்கியதோர்நேர் மேற்குக்காவிதீர்த்தம். ௨.



இத்தலத்தின்றென்பாலி லட்சுமிதீர்த்தமெழிற்பெயரோத மலையின்றடாகமென்பார், முத்திபெறும்வடகீழ்பாற் சர்வதீர்த்தமுயங்குமிதின்கீழ்பாலிற் பொன்னிதீர்த்தஞ், சித்தமிகும் வடபாலில் வாணிதீர்த்தந்தென்றிசையிற்செண்பகநல்லாறுபாயமுத்தமிழ்சேரனுமநதி யதன்றென்பாலின்முந்தியதோர்காஞ்சிநதி முழக்கந்தானே. ௩.

இப்படியாயனேகதீர்த்தங்கள்வாழுமிதின்மேலாயொருநதிபுண்ணியம்பக்கேண்மோ, செப்பரியசிரகிரிமா மாகதீர்த்தஞ்சென்மநோய்களைத்தீர்க்குஞ் சிறப்பாய்வாழு, மொப்பிலயிராவதமாந்தீர்த்த மொன்றுண்டுடனசுவ தீர்த்தமெனவுரைப்பார்பின்னுமைக்குழலாரதிலாடிக் கருப்பமுண்டாய் வாழ்ந்திருப்பரிவ்லோகமடைவரென்றே. ௪.

ஏகதந்தன்முதலாயதீர்த்தம்யாவு மிமையவர்கள்தாமாடி யிதையங்கூர்ந்து, தாகமுடனீர்ப்பூவும் நிலப்பூவோடு தக்ககொடிப்பூக்கோட்டுப்பூவுஞ்சாத்திச், சேகரசடாதரனை யந்தகாரத்திருணீக்கும்பரஞ்சுடரோர்தவாவென்று பாகசாதனன்முதலோர் பணிந்துபோற்றிப் பரமர்திருவுருவதனைப்பார்க்கலுற்றார். ௫.

தும்புருநாரதர்கீதம்பாடத்தேவர் சொன்னபுட்பமாரிபெய்யவரம்பைமாதர், தப்புருவைத்தான்மீட்டநந்திதேவர் தாந்திமிதோமெனவுமத்தளங்கள்தட்டக், கும்பமுனிமுதலானோர் மறைகள்கூறக் குறட்பூதங்குடைபிடிக்க வடியார்போற்ற, வம்புவியிலானந்தக்கண்ணீர்பாயவருட்கூத்து நடனமிட்டாரனந்தகோடி.

இந்திரனோராயிரங்கண்ணாலேபார்க்க வீசன்முடிமேற்றழும்புகட்பறப்பு, சுந்தரஞ்சேர்நெற்றிகண்ணில் நெருப்புவாயிற் றுலங்கியநற்சிரிப்பிடுப்பிலுடுப்பதாகுங், கந்தமலர்க்கையில்வெற்புப்பாம்புவம்புகனகமணிமார்பினென்புவுள்ளிலன்புஇங்கலிதமேனியெல்லாம் பூவாய்த்தோன்ற விமயவர்கோன் புட்பலிங்க மெனப்பேர்செப்பும். ௭.

செப்பியபின்சிவன்பார்த்துமாயோன்றன்னைச் செய்யவுந்தித்தாமரையின்செயலைக்கண்டே, யிப்புவியிற்றுமோதராவென்றேத்

தவிதயமலர்தனையெடுத்து வற்கித்தேத்தி, யப்புவினலருக்கிய
சோடசமேமேலாமனேகவுபசாரமது மன்பாய்ச்செய்து, மொப்
பில்லாத்தலத்தினிலங்குற்றுவாழு முண்மைதனை யெவராலுமு
ரைக்கற்பாற்றே. ௮

சங்கவனந்தனின்மேவி வெயிலால்வாடிச் சார்ந்தவிருபத்தோ
ராயிரமாபாண்டு, மங்கைமுன்னாட்செய்தவிம்பத்தூடேயீசன்
மான்மழுக்கபாலமொடுசூலனாக, கங்கணமோடாலகண்டமூன்று
நேத்திரங் கையிலேமலைபோலிடபங்காளையேறி, யங்கிதமாய்த்
தான்றோன்றிவந்தநாதரிவரென்றர்ச்சித்திமையோரியம்பினாரே.

கங்கையணிகடவுளைப்போற்றித்தெய்வ கம்பிபனுர்விசுவ
னந்தக்காலந்தன்னி, லங்கையாலொருலிங்கமமைத்துப்பூசை
யர்ச்சனைகள்நிவேத்தியமொடு தூபதீப,மங்களமாய்ச்செய்துவை
த்தான்றென்பாறன்னில் வழுத்துதற்கேயெவராலுமார்க்கமுண்
டோ; கொங்குலகிலெப்போதுந் தானேயோங்கிக் குறிவிளங்
குமென்றுரைத்தார்வானோர்கோமான். ௯.

மேல்பாலில்வாசவன்றன்கரியொன்றேகி விளங்குமதம்பொழி
ந்துநிழற் சுழித்துவிம்மிக், காலாலுங்கோட்டாலும்நிலத்தைக்கீ
ண்டுகண்டதுநீர்வெள்ளோடைகமழ்யாலோடை, சேலோடுவரா
ல்குதிக்குங்கழனிசூழ்ந் திவ்வியமாதவிநிழலிற்சிமையாளோடு,
நால்வேதந்தான்முழங்கச்சுறுவலிங்கநாயகராயிருந்தவரைக்கண்
டார்வானோர். ௰௧

கைகூப்பிச்சுறுவலிங்கதேவாவென்று கழலிணையைத்தான்போ
ற்றக்கனிவுகூர்ந்து, தெய்வவல்லிக்கொம்பது போலசைந்துகா
லிற்சிலம்பு பாடகங்கள்கலீரென்னத்தேவர், மையணியுங்கண்ணு
ளமகிழ்ந்துபோற்றி வளரும்பாடகவல்லி மாதேயெங்கள், தெ
ய்வமெனவந்துதித்தாய்தேவதேவே செழுஞ்சுடரேயெனவுரை
த்தார்தேவரானோர். ௰௨

கொண்மூவேந்தன்வடக்கிலசுரர்தன்னுற் குலைகுலைந்துபுவி
யதனிற் குறுகிப்பின்பு, ண்மூவேந்தருந்தொழுதலிங்கந்தன்னை
யிணையடிகளர்ச்சித்துவிதைபங்கூர்ந்து, பண்மூவேந்தருந்தொழு



துபாடியாடிப்பங்கயப்பொற் சுனையதனிற்படிந்துவாழ்த்தி, மண்
மூவேந்தருந்தொழுதுமுத்திபெற்றமன்னுநகையாபுரியையவணங்
கிக்கண்டார். ௧௩.

பன்னீராண்டொன்பானும்வக்கரித்துப்பகர்வானம்பெய்யாதா
ல்மூவர்கூடி,நன்னீராம்பங்கயப்பொற்றடாகமூழ்கி நவில்மூவே
ந்தரைப்பணிந்துபோற்றியேத்திச்,தென்னவனுந்தன்பெயராற்
காவிரிபூசைசெய்வித்துப் பொன்னாட்டுத்தேவர்கோனை, மன்னிய
நல்வளையெறிந்துமுடியையவீழ்த்திமாநிலத்திற்பெற்றபுகழ்வழு
த்தற்பாற்றே. ௧௪

பையராவணிந்தசடைப்பரமன்றன்னைப் பலதேவரர்ச்சித்துத்
தென்பால்வைகி, மைதவழுந்தாழையொடு பூகம்வாழைமன்னு
படராஞ்சூழ்ந்தவனத்தில்வைகித், தெய்வமெனவந்துதித்தசப்த
மாதர்செழுமுன்னாட்செய்தசிவலிங்கந்தன்னைக்,கைகூப்பியெழு
மாதைச்சத்திபீசர்கழலிணையைப் பூசித்தார்கருத்தில்வானோர்.

அத்தலத்தின்பெருமைதனைச்சிறிதுசொல்வே னன்னுளிலெ
ழுமாதராங்கமேவிப், பத்தியுடனம்மனையுங்கழங்கும்பந்தும்பது
மமலர்க்கைசேரப்பரிவாலாடிச்,சித்தமகிழ்ந்தொருதீர்த்தமூழ்க
முன்னாட் செய்தவினைப்பயன்புருடரூபமாகிப்,பத்தியுடனெழுந்
தோடப்பதிகள்கண்டுபடிசாபம்பிடியென்றார்பதைத்தார்மாதர்.

மண்ணினில்நாவலந்தீவிற்கொங்கில் வைகிவளர்தாழைபூகஞ்
சந்தனங்கள்வாழை, விண்ணினுயர்சோலைக்குட் புகுந்துவேத
விதிப்படியேயொருலிங்கம்விரவிற்செய்தே, யெண்ணரியவாகம
நாற்படியேபூசையிருபத்தோராயிரவற்சரமுஞ்செய்வீ,ரண்ணு
லமங்கெழுந்துவரந்தாயேயீவாரந்நாளிற் பொன்னாட்டையடை
குவீரே. ௧௭

என்றவராற்செய்தலிங்கந்தன்னைப்பூசை யியற்றுதற்குக்குறு
முனிவன்பின்புசெல்ல, நின்றிடும் வாதாவிவில்வலவன் வஞ்சம்
நினைத்தொருவனசமாகிச் சித்தனாகிக், குன்றனையீரடியார்க்குப்
பத்தனன்னங்கொள்கென்றாரிவர்கொண்டார்குடலிற்பாய்ந்தான்
வன்றிறல்வாளரக்கனெனவயற்றிற்கையை வைத்திட்டாரிவரிருவ
ர்மாண்டார்பின்னும். ௧௮

அகத்தியற்குப்பிரகத்திதோடந்நீரவன்றாவிற் சிவன்சித்தரூபமாகிச், சத்தினிலேழ்மாதர்தொழுமிலிங்கந்தன்னைத்தான்பூசியெனவிசைத்தான்சாற்றக்கேண்மோ, பகற்பொழுதிற்சோமவாரத்தில்முக்கட் பகவனடிதனைநினைந்தேயுண்டிநீத்துக்,குகக்கடவுட்கபிடேகந்தூபதீபங் கொழுங்கடப்பமலர்சாத்தக்குறைகள் தீரும். ௧௯

எனச்சொல்லக்குறுமுனியெவ்விடமோவென்னவெழிலனந்தன்வாயுமுன்ஞளியற்பொன்மேரிற், சினத்தெழுந்துவந்தனுமதியின்றென்பாற் றிகழ்கனகாசலமொன்றுண்டதனின்கீழ்பால், பனத்தொலைவாவங்கைவகையாமலருங்காயும் பழங்களுமேநிறைந்தழகுபரவியந்த, வனத்துயர்ந்ததாழையொடுபூகம்வாழை, மன்னியவாரம்பலவாய்வயங்கித்தோன்றும். ௨௦

அம்மலையின்மகத்துவங்கள் சிறிதுசொல்வே னதிற்காணுச்சுனையொன்றுண்டதனின்மூழ்கிச், செம்மலராங்கடப்பமலர்தன்னைச்சாத்திச் சிவகுருவாங்குமாரவேட்டன்னைப்போற்றி,மும்மலங்களகற்றிடுஞ்சத்தீசர்தன்னை மொய்குழற்கணேசனை மற்றுள்ளோர்தம்மை,யிம்மையிற்செய்யெனக்கனவுநீத்தான்வேதனெழிற்புதல்வன்பூசைசெய்துபொதியஞ்சேர்ந்தான். ௨௧

கடையுகத்திற்சோணுட்டில்வணிகர்கோமான்கைப்பொருள்கொண்டுயர்மேற்கிற்கடிதிலெய்திப், படைபயிற்றுஞ்சேரமான்றனதுநாட்டிற் பலவிலங்கால்மிளகேற்றிப்பரிவாலெய்திக்,கடமுயர்ச்சந்தாசலப்போற்கனகவெற்பின் றன்கீழ்பாற்கோபுரமுந்தன்னைக்கண்டா,னிடமிதுவென்றிரங்கினனவ்வனத்திலிராமுழுதுந்தூங்கினனியல்பைக்காணுன். ௨௨

அவ்வனத்தில்விடிந்தபின்புபரமன்சித்தராகியுமேவணிகேசனவனைக்கண்டே, யெவ்விடம்நீரிதுவென்னச் சித்தன்கேட்பானென்றெண்ணிப்பசியபயறென்றுசொன்னுன், கொவ்வையிதட்கன்னியர்சூழ் சோணுடெய்திக் குவலயத்தில்மிளகுவிலைகூறிப்பொன்னை, யொவ்வொருவற் காயிரமாய் வாங்குமூட்டை யுவந்தளித்தான்பசியபயற்றுருவங்கண்டார். ௨௩



கண்டவுடனிவன்புரட்டனென்றுகூறக் கண்ணீர்சோர்ந்தவ்வனத்திற்கண்டசித்தர், பண்டையாய்ச் செய்தாலிப்பொன்னையெல்லாம் பரிந்தளிப்பேனுமக்கென்று பரிவாய்க்கோடி, தெண்டனிட்டான்சாஷ்டாங்கஞ்செய்துபாரிற் றிருவருளாற்கறியாகச்சிரித்தெல்லோருங்,கண்டவுடன்பசும்பொன்னையவற்கேநல்கிக் கருதியசத்தீசரெனக்கழறினரே. ௨௪

முன்னுகத்திலயனெடுமால்சத்தமாதர் முத்தியடைந்ததின்பின்புதேவர்பூசை,பின்னுகத்திற்குறுமுனிவர்பூசைபாண்டுபின்வணிகன்பூசைசெய்துபெற்றான்பேறு,மன்னியநற்சோணுட்டிற்கரிகாற்சோழன் மனமுவந்து பூசித்தகதைபின்சொல்வே,னின்னிலத்திலனந்தயுகங் கண்டதாமென்றெழிற்சூதர் சவுனகருக்கியம்பினரே. ௨௫

ஸ்ரீதேவர்கள்பூசைச்சருக்கம்

முற்றும்.

ஆகச்செய்யுள்—௧௭௧.

## கரிகாற் சோழச் சருக்கம்.

மன்னியநல்லகத்தியருக்குபதேசித்த வள்ளல் சிராசலக்கடவுள்மலர்த்தாடன்னை, யுன்னியவ ராறெழுத்தையுச்சரித்தேவுயர் கடப்பமலர் சாத்தியுவந்துபோற்றிச், சென்னெல் விளைசோணுட்டைவிட்டு நீங்கிச் செல்வமிகு கொங்கதனிற் சனித்துவைகு, மன்னவனுங்கரிகாலச்சோழன் பூசை வழுத்திய வாறினிதெடுத்து வசனிப்பேமால். ௧

செருக்களத்திற் பொருது வென்றதனிமாதங்கந் திரும்பிவரும் வழியிலொரு கோழிச்சேவல், பெருக்கினெடு மயிர்சிலிர்த்துச் சிறகடித்துப் போராற்றலுடனே கொக்கரித்துக்கொத்தத், தருக்குவதை நோக்கியிது வீரசாரந் தங்குதரையெனச் சோழன் றன்னுட்கொண்டு, தெருக்குலவவியற்றிய வச்சயநகர்க்குத் திறன்மிகுந்த கோழியெனச்செப்புவாரால். ௨

இந்தவட்டுறையூரிற்பராந்தகப்பேரெழிற் சோழனரசுபுரிந்திருக்குநாளிற், பந்தவினைப் படர்கொடியின் விதைவைத்தீய்க்கும் பழம்பதியாஞ் சிராமலையீசருக்கன்பாக, அந்திபகலறுகாலம்

வாசப்பூவா லலங்கரித்துப்பூசிக்கு மடிமை பூண்ட, நந்தலறு சாரமா முனிவனென்பான் கலந்திகழுநந்தவனப் பணி பூண்டானே. ௩.

திருப்பள்ளித்தாமத்துக் கருகமாகச்செவ்வந்திச்செடி வளர்த்தான் பூப்பரித்து, உருக்கமுடன் தொடுத்திறைவன்மீதுசாத்தி உள்ளுருகிவழி படுவானிப் பூதன்னை, மருக்குலவு குழலணிய வரசன்றேவி மனத்திலுவனவேவலர்கள் கரவாற்கொள்ள, அருட்குலவு மிறைவனுக்கிலாமையாலிவ்வலர்த்திருடன் றனைக்காண அருந்தவத்தோன். ௪.

கங்குலி லிங்கொளித்திருந்தான் சோழனேவற் காரர்வந்து மலர் திருடக்கண்ட தூயோன், அங்கமெலா நடுங்கநாக்குளறப் பொங்கி யரசன் முனங்கொடு விடுத்தானலரினோடு, சிங்கவனைச் சோழனைதைக்கண்டு மொன்றுஞ் செய்யாமலே வாளாவிருக்கக்கண்ட, புங்கவனுண்ணெஞ்தரசன் முகத்தைப்பார்த்துப் போதமுடன் சிலவார்த்தை புகல்வதனேன். ௫.

ஊரிலங்கங்குள கள்ளர்தம்மைவேந்த னுளவறிந்து பிடித்தொறுப்பனுறுதியாக, பேருறு நின்னேவலனே திருடக் கள்ளப் பெருபொருளை நீயடைந்து களித்தாயானல், சீருறுமோ நின்னுடு தேவதேவன் றிருந்தாமத் தருமலரை மனைவியோடு, நாருறுகட்டிலிற் சூட்டிலம்மைக்கின்பம் நல்கிடுமோ வெனச் சொல்வானுளளம் நைந்தே. ௬.

வேறு.

இந்த வுயிர்தன்னையமன்கொடு போயில்லுடனு
மிந்தனப் பூமெத்தையின் மேலேற்றிலெரியுண்போது
சந்தனமுஞ் செவ்வந்தி தன்மணமும் வீசிடுமோ,
வந்த கெடுஞ்சூறையல்லால் மற்றொன்றும் வீசாதே. ௭.

என்றுரைக்கக்கோவுமிதய மறிகக்கலங்கிச்
சென்றொறிந்தானவ் வனத்திற் செழுமுனிவன்றானறிந்து
குன்றனையகோளான் குறுகுமுறையூரழிந்து
சென்றிட மண்மாரி பெய்யச் செபித்தான் கடுஞ்சாபம். ௮.

வேறு.

கார்மிபனுஞ் சூட்சமிதிற்செய்ந தேவி கணவனுமாய்நடத்திட வுங்கடிதுறச்செல்லச, செமபியன்றன் மேயவதனை யயிலில்வைத்துத் திருப்பமலை நாடதனிற்சென்றான் மேகங், கம்பிமணன்மழை பொழிய வுறையூர்மேவிக் கதிக்கவழிந்தது சின்னாட்கண்ட பின்பு, பைம்பொன் முடிதாங்குதற்கு மகவோவில்லை பருத்தமதயானை கையிற்கடமேயிந்தார். ௯.



ஈந்தபின்பு கொங்கதனிற்சென்று சோழனினியானையிறங்கிய ஊர் சூலூரென்பார், வாய்ந்தமதயானை சென்னிமகற்குப்பட்டம் வைப்பதற்கு முடிமீதிற்கடனீராட்டி, நேயதனுதிக்கை யதனைவெடுக்கமாட்டா தேகிட்டோர் கரியெடுத்துக்காலிற்கிற, வாய்ந்த கரிகாற் சோழ னெனப்பேர்வைத்து மகிழ்ந்திட்டாருலகமெல்லாம் புகழ்ந்திட்டாரே. ௰.

மன்னியபேரூர் சென்று பாவம்போக்கும் வளர்காஞ்சிநதியதனில் மகிழ்ந்து முழ்கி, முன்வினையைத்தீர்க்கும் பட்டீசர்தம்மைமொய் குழலைக்கிணைசனையு முவந்துபோற்றி, புன்னியநற்கோபுரமுஞ் சிவாலயங்களுடனமைத்துப் புக்கொளியூருவந்துபோற்றி, நன்னயஞ்சேர் பூந்துறைக்குவந்து மிக்க நற்கரியகாளி பிரதிட்டை செய்தான். ௰௧.

காவிரியின் கரையருகேரோடை தன்னிற் கதித்திடு லிங்கந்தனது பெயராற்செய்து, பூவிரியும் பொழில் சூழ் பூந்துறைக்குங் கீழ்பால்புகல்கரிய மாதவனென்றன்மைத் தேழ்மாதர், மேவிய சத்தீசருக்குக் கோபுரங்கள் மிகக்கற்பக்கிரகங்கள் விரைவிற்செய்து, தாவிய வெட்டானையின்றன் பலமும்பெற்றுச் சார்ந்த உறையூர்க்கரசுதான் பெற்றானே. ௰௨.

பெற்ற பின்பு கொங்கிலுறு பூந்துறைக்குப் பெரிய திருவிழா மீனமாதந்தன்னி, லுற்றிடு நற் பூரணையா முத்திரத்தி லுயர்கரிய காளிக்கு மதுவே செய்தான், வெற்றிபெறுந்தாமோதரர்க்குக் கன்னி விளங்கிரவிமதி கூடிமேவு நாளி, லற்புதமாய் நடத்திவைத்தான் றேவர்போற்ற வவனியில் நால் வீட்டுக்கப்படியாந்தானே. ௰௩.

ஐந்தாம் வீட்டின்பேர் பிடாரியூரா மதிற்காளிபூசை செய்தலமதாகுஞ், சுந்தரஞ்சேர் சிவகிரியில் முருகவேட்குமுலங்கிய நற்பூசத்தேர் சுகமாயோட்டி, நந்திமிசையேறவருநாதனார்க்கு நற்சதுர்த்தி விநாயகற்கு நடத்திவைத்துக், கந்தமலர்ப்பிராட்டிக்கு நடத்திவைத்துக்கனிவுற்றான் கரிகாலச் சோழன்றானே. ௰௪.

மன்னிய வூரோன்பது மங்கலமே நாலுமலரோடை மூன்று வுயர் பள்ளிரண்டு, நன்னயஞ்சேர் நிலைரண்டு துறையாம்ரண்டு நலமான பாடியொன்று தொழுவே யொன்று, மின்னிலத்தில் விளக்கொன்று கம்மொன்றுகு மினிய விளக்கேத்தியு முப்பத்திரண்டே. ௧௫

ஒப்பில்லாச் சோணாட்டுக் கரிகால் சோழனுயர் கொங்கிற் பிறந்தாகவழ்ந்துயர்ந்த பின்பு,செப்பரியபலே நாட்டிற் சிவாலயங்கள் செய்துவைத்தே உறையூரைச் சேர்ந்தான் மன்னோ, முப்பவமுமகன்றிட நன் முத்திபோங்க முறைமைபெறுகைமிராரணியந்தன்னிற், றப்பிலாச்சவுனகாதி பர்க்கு முன்னாட் சாற்றினார்குகரிஷி சகத்திற்றனே. ௧௬.

கரிகாற்சோழச் சருக்க முற்றும்.

ஆகச்செய்யுள் ௧௮௭.

# சேரமான் வரலாற்றுச் சருக்கம்.

உற்றநான் முகத்தோனைச்சிறையிட்டுப்
பெற்ற தந்தைக்குபதேசம் பேசிடும்
வெற்றிமேவுஞ் சிராசல வேலர்தாட்
பற்றிச் சேரன்பழங்கதை யோதுவாம். ௧.

துன்னுகிட் கடல் சொற்றிடு மேல்கடல்
மன்னும் வேங்கடம் வாழ் கன்னிமாநதி
செந்நெல் மேவுஞ் செழுந்தமிழ்த்தேசமா
மன்னர் மூவரச சாட்சி வாழுநாள். ௨.

உற்ற சோழற் குறையூருகாணியாம்
பெற்ற சேரற்குப் பேசிடும் வஞ்சியூர்
கொற்ற பாண்டியர்கோதில் மதுரையூர்
வெற்றி மேவ விளம்பிடி மாட்சியே. ௩.

ஆட்சிதன்னின் முன்னந்தணராதிபாய்க்
காட்சிமேவு நற்காஞ்சி புரத்தில் வாழ்
தாட்சியில்லாத்தலைவர்கள் நால்வரை
மீட்சியாக விரைந் தழைத்தார்களே. ௪.



வந்த பின்பு வழுதிதன்னாட்டினுஞ்
சிந்தைமேவு நற்சேர நன்னாட்டினுங்
கொந்துலாவுங் குளிர் புனனாட்டினும்
பந்தமாமுப்பதிக்குடி வைத்தனர். ௫.

கொங்கு வேந்தன் குறித்தொருநால்வரைப்
பங்கமில்லாப் பதினிலில் வைத்தனன்
செங்கண்மால் விடைத் தேசிகன்றபதங்
கங்கைபாலகர்கை தொழுதேத்தினார். ௬.

உள்ள மன்பு கொண்டோங்கு நற் பூந்துறை
வள்ளல் கண்ணுவுடையான் வயிற்றினிற்
றெள்ளு செந்தமிழ்ச் செல்வம் வளர்ந்திடும்
பிள்ளையார் பதினொன்றினைப் பெற்றனன். ௭.

உற்ற வெள்ளோடு லகுடை யானுக்குப்
பெற்ற பிள்ளை நவமெனப் பேசுவர்
சுற்ற மேனிகுஞ் சொன்னசையாபுரிப்
பற்றும் வீரற்குப் பாலெழுவராம் ௮.

நீதிமேவி நிலைத்தெழுபாதையி
லாதி நல்ல குமாருடை யானுக்குச்
சோதியான சுடர் மணிபோலவே
யோதுபால கரைவரையுற்றனன். ௯.

வேறு.

முன்னுமையாள் செய்தவர் முப்பத்திரண்டோர் முறைதவராதவ் வூரிற் குடியேற்றவைத்தார், மன்னு சின்னநாளாற் கொங்கராறு நான்கு வளநாடும் பரவினதால் மரபிற் குன்றார், தன்னில் விற நான்கு வளநாடும் பரவினதால் மரபிற் குன்றார், தன்னில் விற ண்மிண்டனைப் பிறந்தார் கொங்கிற் சார்ந்த திருவாரூரர்க்கன் பேச்சார்ந்து, நன்னயஞ்சேர் சுந்தரற்குத்தூதுசென்ற நாதனி ருக்குங் கோவில் நணுகிச் சார்ந்தார். ௰.

கோளிலுங் குட்டக்கமாய் வந்தபோரைக் கொல்வணிந்தக் கோடாலி தன்னிலெறிந்து, ஆருடன் விடியா முன்னெ பூந்துறை தானமுட்டன செப தலைகனைப்பாய்ச்செய்து, மாவலுடன் காத்திருந்தபோது நாடன்னிலருள் விடங்கன் சுந்தரரை,வாவெ ன்றேத, காவலன் பரவை சமேதகரைப்வாயில் நரியகாப்பூல யொடு நடந்து வந்தார். ௧௧.

வர்களைத் தான்பார்த்துக் கோபங்கொண்டு வன்படையைக் கையிலெடுக்க வரவை யோர்ந்து, சுந்தரஞ்சேர் சினகரத்தி னுள்ளே சென்று சொற்றிடு கபாட பந்தனங்கள் செய்ய, யிந்த வூர் மிதிப்பதில்லையென்றே மீண்ட மேழுந்திருந்து புறநகரி லெய்திப் பின்பு, வந்ததறவோர் கன்னங் கொடுத்துப்பார்த்து மகிழ்ந்திருந்தார் வெகுநாளாய் விளங்கத்தானே. கஉ.

சேரனது பட்டந்தொண்ணூற்றினுறிற் செழித்திடு நல்லு லாச்சேரன் காலந்தன்னிற், பாரினில மெய்ப்பசியானும் நோயி னாலும் பதைபதைத்துச் சிலசிலவரோடிப் போனார், சீருலவும் யாழ்ப்பாணரெனும் பாணற்குச் செப்பசொக்கேசக் கடவுட் சொற்கன்பாய, வீரமதிமலிபுரிசையெனப் பாச்செப்பவேண்டிய பொன்கொடுத்தனனும் விரவில் வேந்தன். கங.

அந்நாளிற் சுந்தரனார் செப்பிக்கேட்டு மரியவுலாச்சேரன் பொன்னூர்சென்று, வன்மீக நாதரையுந் தியாக நாதர் மலர்ப் பதத்தைப்போற்றிசெய்து மகிழ்வுற்றெய்தித், தென்னால சுந் தரைத் தெரிசித்தேத்திச் செழும்பரவை நாச்சியரைத் தெண் டஞ்செய்தே, யுன்னுமனத்துயற தெல்லா மவர் பாற்பேசி யுயர் கொங்கு நாடெல்லாஞ் சிவனுக் கீந்தான். கச.

மன்னுசிவ மறையோர்கள் தம்மைக்கூவி மண்மகள் புத்திர ரெங்கேயென்று கேட்க, புன்னு பசியாலுலர்ந்து நோயால்வாடி யுறுதொண்டை நாட்டினிலே யுற்றாரெல்லார், பின்னு நண்ணு வுடையானுமன் மாபில்வந்து பெயர் பெற்ற வேலப்ப நயினா னென்போன், குன்றனைய தோளினான் சேரன் றன்னைக்கூடி னான்றிரு விஞ்சைக்களமே சென்றார். கரு.

ஆங்கவதற்குத்தன் முடியைச் சூடிப் பின்ன ரவனியெல்லா மொருகுடைக்கீழரசாயாளப், பாங்குடைய பொன்வண்ணத் தந் தாதி பாடிப் பரிவுபெறு முலாவொன்று பண்பாய்ச்செய்து, வேங் கையதழுடையான்றேற் சிந்தைகளித்து வெள்ளிவெற்பைத் தா னெண்ணியிருக்கு நாளிற், றேங்கு புகழ்ச் சுந்தரற்கு விமானம் யானைசென்றிட மேலேறி வஞ்சைக்களமே சென்றான். கசு.

சென்றவர் சேரற்குரைக்கப் பரிக்கு விஞ்சை செப்பியவர் மேனிச் சென்றார் வெள்ளிக் குன்றுடையார் தனக்குரைப் பேசினன்றாரூரர் கூறிட்டாஞ்சம்பந்திக்கானைகொண்கனென்பா



ன், வென்றிபெறுஞ் சினகரத்துட் புகுந்தந்தாதிமேனு முலாவி னையிரண்டும் விளம்பி வந்தா, ரென்றழைத்துக்கைலையரங்கேற் றிவைத்தா ரிறைவனையாரூரனின்பம் பெற்றான். கஎ.

சிவன்மறையோர் சிலநாளிற் கொங்குநாட்டைச் செப்புகங்கை குலவைசியர்க்கடகே யீந்தார், பவமுடைய பீசங்கு நாட்டுக்கள் ளர் பகலுமிராக்கொள்ளை செய்யச் சென்னியென்போன், தவ முடைய சோராச்சியத்துக் கள்ளர் தனைப்பிடிப்போர்க்கமுத னியீவனென்றே தானேகாணி, புல்லையுடன் பறையறைய வட தேசத்திலுயர் வேட்டுவக் குலத்தில் நால்வர் வந்தார். கஅ.

மன்னுபொத்திராயனுயர் புசபலமாராயன் வள்ளலிராயன் கொங்கு மாயனென்போன், இவ்விலத்திற் பீசங்கு நாட்டுக் கள்ளரிவரை யெலாங்குறும் படக்கியினிதாய்ச் செய்யப், பொ ன்னிவள நாடனிவர் நாலுபேர்க்கும் புகழாறு நாடெனப்பொன் முடியைச்சூட்டி, யிந்நிலத்திலரை சாட்சி செய்து நாளினினிதுற் றான்குலோத்துங்கச் சோழனென்போன். ககூ.

சுப்பிரனு நாவலனாற் சாபப்பெற்றுக் கதித்தகுலோத்துங் கனரசழிந்தசாலே, வெம்பு பிணஞ்சுடு புலயனரசனாகி மேதினியி லாதொண்டைச் சோழனென்றே, யம்புவியிற் பெயர்வைத்துச் சோழனுடிம மழகு தொண்டை வளநாடு மாளுங்காலே, யும்பர் தொழுங் கங்கைகுலப் பெண்ணை வேட்டலுறுவதற்கு மனம் வைத்தானுறுவதோரான். உ௰.

வல்லைக்காளத்தி தன்பாற் பெண்ணைக்கேட்டு மனமகிழ்ந்து புலையரெல்லாம் வந்தகாலைக், கல்லுக்காற் பந்தலிட்டுப் பெண் ணொன்று சட்டிவைத்துத் தென்றிசையிற் கருதிவந்தார், சொல்லரிய விசுவகன்மன் பொறியை வீழ்த்திக் கொலைத்தன னோர் புலைச்சி தப்பிச்சுதனைப் பெற்றுக், சொல்லுதல் செய் வேளாளர் தம்மைக் கொல்லக் குவலயத்தில் மூன்று பட்டங் குறிப்பாயாண்டான். உக.

ஆண்டிடு நற் காலத்திற்கவுண்டரென்றே யப்பெயரைத்தான் படைத்தார் கொங்கில் வந்தோர். வேண்டிய பேர்திசைப் பெய ரும் பாசைப்பேரும் மெய்த்தொழிலின் றன்பெயரும் விரும்பிக் கொண்டு, பூண்டிடு நற்சாதகன்மம் நாமகன்மம் புரியன்னப் பிரா சனநற்சவளம் பூணூல், காண்டிடு நற்கலியாண மதனிற் செய் யக்கருதிடு பாணிக்கிரகணங் கற்பித்தாரே. உஉ.

மன்னிய போதர்யனரும் வந்துகங்கை மரபாளர் தமக்குரிய மாக்கமாறு, பன்னியநற சவுசம் பற்கொம்புஸ்நானம் பெருமனுட்டானமோடு பூசையுண்டி. யிந்நிலத்திற் பஞ்சவுசற் காலந்தன்னிலெழுந்து கணேசரைத்தொழுது மிறையை வாழ்த்தி, நன்னயமாய் லலாடசூனிய மில்லாமல் நன்மார்க்கந்தனைச்செய்ய நவிற்றினரே. உரு.

இது வெல்லாம் வெள்ளாளர் தமக்கேயாகும் மில்லறத்தின் செய்கைதமந் கினியவெல்லாம், நிதி தேடித் தென்புலத்தார் தெய்வந்தானம் நீண்ட வொக்கல் குடும்பமொடு வரசர் கீதம், ஆதி பரவு சேரன் வரலாறுஞ் சொல்லிச் சுத்தமுடன் மனமகிழ்ந்தார் நீராடி, நதியுலவுநைமி சாரணியந்தன்னில் நற்சூர் சவுனகற்கு நவிற்றினரே. உசு.

சேரமான் வரலாற்றுச் சருக்கம்

முற்றும்.

ஆகச்செய்யுள் உகக.

உ

# குமாரச் சருக்கம்.

பன்னுநாளிப்பதிதனில்மேவிய
மன்னும்வேலர்மலர்ப்பதம்போற்றியே
செந்நெல்வேலிசெழித்திடும்பூந்துறைப்
தன்னிற்குமாரசருக்கமதோதுவாம்.

உற்றவெள்ளிப்பொருப்பினிலோங்கியே
பெற்றமூரும்பிரான்பதம்போற்றியே
நற்றவத்துனின்நண்ணியபிரணவஞ்
சற்றெனக்கினிச்சாற்றுதல்வேண்டுமால்.

என்றுகாரணியேத்தனுமைமுகன்
வென்றிவேலனைவிட்டுவாவென்றனர்
துன்றுநீலச்சுடர்மணிக்காதினி
லொன்றித்தேவனுபதேசம்வைத்தனர்.

வைத்தபோதினில்வண்டுருவாகிய
சத்திவேலவர்சார்ந்திடுங்கூந்தலிற்
சித்தமேவைச்செயப்பெறக்கற்றன
ரத்தன்பாரில்லறந்தனன்சாபமே.



சொல்லுங்கிரேததிரேததுவாபர நல்லபின்னுகநான்கினில்வேதியர், வெல்லுஞ்சத்திரியர் வசியர்குலம்,வல்லசூத்திரனாகவருகவே.

செய்யசிவன்சாபத்தால்முருகவேளுஞ் செழித்திடுநற்சோணாட்டிற்காழியூரில், வையமெலாந்துதித்திடுநன்மறையோரானமன்னுசிவபாதரிடம் வந்துதோன்றிச், சைவமெலாந்தழைத்தோங்க ஞானம்பெற்ற சம்பந்தராகவவதாரஞ்செய்து, வையகத்திற்சமணழித்தேயென்பைப் பெண்ணாவரச்செய்தார்முதலுகந்தில்வானோர்போற்ற. சு.

மற்றையிரண்டாமுகத்திற்பாண்டிநாட்டில் வருமுக்கிரகுமாரபாண்டியனாய்வந்து, வெற்றிமிகுமிந்திரனை மகுடம்வீழ்த்துவேல்வளைசெண்டாயுதமும்விருதும்பெற்றுக், கொற்றமிகுங்கடல்சுவறவேலும்விட்டுக் குறித்தமகமேருவினைச் செண்டாற்றாக்கிப், பற்றிவரும்பூமியொரு குடைக்கீழாண்டு பன்னுதடாதகைக்குமொருபாலனானான். எ.

பசிவிலகுந்துவாபரத்திற்சோழநாட்டிற் பண்புமிகுஞ்சுவாமிமலையென்னுமூரில், வசியர்குலந்தனிற்சுவாமிநாதனென்றேமாநிலத்திற்பெயர்படைத்து வந்துதோன்றி, நிசியதனிற்கன்னியர்கள்விதவைமாதர்நேர்கண்டு தரிசித்தாற்கற்பமுற்றுக், கசிவுறநன்மகவுயிர்க்கச்செய்து சித்துகாட்டிவிளையாடினானுலகிற்றானே.

கடையுகத்திற்கொங்குவளநாட்டின்மூத்தூர்க் கதிபதியாங்கங்கைகுலன் மணிபகோத்திரன், றிடமுயருஞ் செல்லப்பனுதரந்தன்னிற்சென்று மனைதன்வயற்றிற்செல்லுந் திங்கட், கடலமுதம்போற்குறிகள் பத்துஞ்சென்று காதலித்துப்பிறந்ததினாற் செல்வமோங்கி, நடைபயிலச்செல்வக்குமாரனென்றே நாட்டினருலகினுள்ளோர்நாடுங்காலே. கூ.

சொல்லரியவிக்குக்குக் கணுவாம்போலத்தோராதகலைக்கியானமாறுசாத்திரம், நல்லபதினெண்புராணங்கள் கற்றுநன்மார்க்கந்தனையெழுதி நவிலும்விஞ்சை, யல்லலறத்தான்கற்றுச் சித்தனாகி யவனியோர்தங்களுக்கு வியாதிதீர்த்துச், செல்வமிகுஞ்செஞ்சேரிதன்னைச்சார்ந்துசெழித்திடக் கோவர்த்தனங்கள் செய்தபின்னை ௰.

வான்மறந்துகோவுக்குமிரையில்லாமல் வளருகரிகிரிதன்னில்மாடுமேய்த்துக், கான்றிரணம்புனல்சருகுமில்லாதாலே கதித்தவளர் பூந்துறைக்கிக் கங்குற்சென்றார், ஆன்மிகுந்து புன்மேய்ந்துவிசதியாகியடுத்திடுநற்சேமூரிலன்பாய்வந்து, மூன்றுநந்தேயமுகருந்தியுலகில்வாழ்வோர்க் குறும்வினைகடாந்தீர்த்து மோங்கிவாழ்நாள். கக.

ஓங்கியதென்னிலையதனிற் கொங்குராய னுபர்கோட்டை கட்டியரசாளுநாளில், தாங்கரியமுடியரசரெவர்வந்தாலுந் தான் வணங்காமுடியென்றே தரும்பேர்பெற்று, வீங்கியநன்மூலமடவார்கூட்டமேவி விருந்தோடுகளியர்டன்மிகவேசெய்து,தேங்கிய நன்னாட்டுக் கொத்ததுவேயென்று, சிலகாளரசாண்டான்செங்கோல்வேந்தன். கஉ

அவனியெல்லாமொரு குடைக்கீழரசேயாள்வா னபிரவுடதேவராயர் நாளிற், றவமுடைய சொல்லிலரிச்சந்திரனென்றுந் தகைமையுளானொருவேந்தப்பாச்சியென்போன், குவலயத்தில் வரக்காணுதிருக்கநாட்டுக் கொத்ததுவே கொங்குரா யனுக்குமென்ன, வவனுரைக்கச்சிலகன்னப் பறையர்தம்மை யழைத்திட்டானொருகுடைக்கீழாளுநாளில். கங

கூட்டமிட்டுப்படையெடுத்துக் கொங்குராயன் குறித்திடுநற்கோட்டைக்குட் கன்னமிட்டு, நாட்டினிலே முக்குறுணி தாலிகொண்டு நலவாசற்பிள்ளையரை நலமாய்க்கொண்டார், தாட்டிகமாய்க் குப்பனென்போன் கன்னவாசற் றுணிறந்தான்வீரசொற்கந்தானேமேவ, நாட்டினிலே செல்வக்குமாரருக்கு நானடிமையாகினேனென்றான்வீரன். கச

அந்நாள்தொட்டெந்நாளு மடிமையாகி யான்செல்வக்குமாரனுக்குமன்புகூர்ந்து. மிந்நிலத்தில் மானிடற்கும் வியாதிதீர்த்துமேற்பிறவித்துன்பமதை மெளிதினீக்கிச், கன்னமிடுஞ்சடுங்கோலத்தானைகொண்டு காசினியெல்லாமினிதாய் காத்துவாழுஞ், செந்நெல்மிகும் பூந்துறைநற்சேரூர்தன்னிற் செயம்பெற்றானென்றைநும் நயம்பெற்றானே. கரு

திங்களின்மும்மாரிபெய்ய வரங்களோங்கச் செழித்திடுநல்லுயிர்களெல்லாஞ் சிறப்பாய்வாழக், கங்கைகுலத்தோர்வசியாசர்முன்னோர் காசினியில் மற்றுள்ளோர்களிதுவாழ்கப்,பங்கயனுநெடுமாலுமீசன்வாழ்சப் பாரினிலிப்புராணமது பண்பாய்வாழ்க இங்கிதமாயிதைப்படிப்போர் கேட்போ ரோட்டியெழுதிவைப்போரென்றுமினிதுவாழ்க கசு

சொல்லுஞ்சென்னிமலைவேலவர் சோபனம் துய்யவள்ளிதெய்வாஜயுஞ் சோபனம்; நல்லபுட்பவனநாதர் சோபனம் நாரிபாகம்பிரியாதாள் சோபனம். கல்லைப்பெண்ணாகச்செய்தா மோதரக்கடவுள் சோபனம் நான்முகன் சோபனம்; செல்வமேழிசெழித்திடும் பூந்துறைசேர்ந்தமுப்பத் திரண்டூருஞ் சோபனம். கள

ஆகச்செய்யுள் உஉஅ பூந்துறைப்புராணம் முற்றுப்பெற்றது.



உ

சிவமயம்.

# பூந்துறைப் புராணசாரம்.

காப்பு

நேரிசை வெண்பா.

பொன்னார் திருமேனிப் புத்தேளுவக்குதன்பேர்
சொன்னார்க் கருள்பூந் துறைச்சரிதம்—என்னார்வத்
தாலெளிய சொல்லா லறைய வொருதுணையாம்
வாலகண பதிதாண் மலர்.

நூல்.

நீர்வளம், நிலவளம்பொருந்திய புண்ணியபூமியாகிய நைமிசாரணியத்திலே தவவலிமையுற்ற முனிவர்களெல்லாம் சூழ்ந்திருந்தார்கள்; அவர்களில் சூதமுனிவரை சௌனகாதி மஹாமுனிவர்கள் வணங்கி ஐயா! உலகத்திலே ஜீவகோடிகள் தங்கள் பாவங்களைப் போக்கிக்கொள்ளவும், இஷ்டபுருஷார்த்தங்களைப் பெறுவதற்கும் யோக்கியமான ஒரு சிறந்த புண்ணியதலத்தைச் சொல்லிய நூல் வேண்டுமென்று வேண்டிக்கொண்டார்கள். சூதமுனிவர், இளஞ்சிரிப்பு உடையவராய் முனிவர்களை நோக்கி, தவசிரேஷ்டர்களே! நீங்கள் இப்பொழுது கேட்டது மெத்தசந்தோஷமான கேள்வி, இதனை ஒவ்வொருவனும் அவசியம் தெரிந்துகொள்ள வேண்டியதே ஆதலின் அதனைச்சுருக்கமாகச்சொல்லுகிறேன்;

புத்திமான்களே; இப்பூமண்டலத்தில் எத்தனையோ புண்ணியஸ்தலங்கள் இருக்கின்றன. அவற்றுளெல்லாம் தேர்ந்து எடுத்தால் ஆயிரத்தெட்டுஸ்தலங்கள் விசேஷம். அதினும், நூற்றெட்டுமிகுந்தவிசேஷம், இன்னுங்கன்றாக யோசித்தால் எட்டு அதினும் ஐந்து திருப்பதிகள் ஒப்பற்றதாம் என்றனர். பின்னும்சொல்லுகிறார்முனிபுங்கவர்களே,எத்தனையோதேவர்களிருப்பினும் மற்றவர்களெல்லாம் அழிந்துபோக, எப்பொழுதும் அழிவில்லாதிருக்கிறபரப்பிரம்மமாகியசிவபிரான், என்றும் அழியாத அத்வைதப்பொருளாய் விளங்குகின்றாரல்லவா! அதுபோலவே

சத்திசிவம் என்னும் பிரிவு இல்லாது ஒன்றென்றால் ஒன்றாய், இரண்டென்றால் இரண்டாய், ஒன்றுமிரண்டு இல்லையென்பதற்கு இன்றி விளங்குகின்ற ஒப்பற்றஸ்தலம் ஒன்றுண்டு. அது தமிழ்நாட்டில் கொங்குதேசத்தே உள்ளது. அதனைப் பூந்துறைநாடு என்பார்கள். அது நாடு ஒன்று. கரை இரண்டாக உள்ளது. கீழ்க்கரை மேல்கரை எனக்கரை இரண்டென்றாலும் ஊன்றிப்பார்க்கும்பொழுது ஒன்றாகவே இருக்கும். அந்நாட்டிலேதான் சத்தியென்றும் சிவமென்றும் பேதபாவனையின்றிச் சத்தியுஞ் சிவமும் ஒன்றாக உள்ளது, ஆதலின் அந்நாட்டிற்குச் சமானமானநாடு இல்லை! ஆகலின் எல்லாநாட்டைவிட இது உயர்ந்தநாடு ஆம். மேலும் பார்வதிதேவியார் எத்தனையோ கோடிகாலம் தவஞ்செய்தும் பெறுதற்கு முடியாதிருந்த இடப்பாகம் அந்நாட்டிலேயே கிடைத்தது. அங்கேயே இன்றும் என்றும் ஸ்ரீ அர்த்தநாரீசுரராக எழுந்தருளியிருக்கிறார். அவர் திருநாமத்தைச்சொன்னாலும், நினைத்தாலும் பெரும்புண்ணியம் கிடைக்கும். அங்குச்சென்று தரிசித்தவர்களும் வசித்தவர்களும் அடையும்புண்யத்தை ஒருவரால் எடுத்துஉரைக்கும் தரமன்று என்றனர். இதனைக்கேள்வியுற்ற முனிவர்கள் மயிர்க்கூச்சுவிட்டு ஆநந்தக்கண்ணீர் உதிரப் பூந்துறைநாடுஉள்ள தென்திசையைநோக்கி வணங்கி ஹர ஹர சிவ சிவ என்று ஸ்மரித்து சூதமுனியைவணங்கி சுவாமி! பார்வதிதேவியார் தவஞ்செய்ததும், இடப்பாகம் பெற்றதும், மற்றுமுள்ளவிசேஷங்களையும் நாங்கள் கேட்டுப்புண்ணியம்அடையும்படி அநுக்கிரகிக்கவேண்டுமென்று வேண்டினார்கள். சூதமுனிவரும் பஞ்சாக்ஷரத்தை ஜபித்துக்கொண்டு சொல்லலானார்.

## உமைதவம்.

பொன்மலையாகிய மேருகிரியிடத்து விளங்குந்தக்கதும் வெள்ளிமயமாக உள்ளதுமானது கைலாயகிரி. அமரர், கின்னரர், கருடர், காந்தருவர், இயக்கர், வித்தியாதரர், முதலியதேவவகுப்பினரும், அநேகமாயிரம் ரிஷிசிரேஷ்டர்களும் ஓதும்வேதகோஷம் நிறைந்து விளங்கத்தக்கது. அஷ்டதிக்குப்பாலகர்களால் போற்றப்பட்டது. இன்னும் பலஅருமை பெருமைகளையுடைய



அம்மலையின்மேல் செம்பொற்கோயிலிலே, நவரத்தினகசிதமான சிம்மாசனத்திலே, உமாதேவியார் இடப்பாகத்துவிளங்கத் தேவர்கள்முதலிய ஜீவர்களுக்குங் காட்சிகொடுக்கும்பொருட்டாக சிவபெருமான் வீற்றிருந்தருளினார். தரிசிக்கவந்த அநேகதேவர்களின் நெருக்கத்தை நந்திகேசுரர்பொற்பிரம்பு கையிலேந்தி விலக்கி சந்நிதிவிலக்கினர். பற்பலதேவர்கள் தரிசித்துச்சென்றனர்கள். பிரமதேவரானவர் வேதமந்திரத்தால் அர்ச்சித்தனர். அதில் "சந்திர சூரியன் அக்கினியாகியமூன்றுசுடர்களும் சிவபெருமானுடையநேத்திரங்கள்" என்னு அருளிச்செய்யப்பட்டிருந்தது. இதனைக்கேட்டபார்வதியார், எல்லாத்தேவர்களிலும் சிவபெருமானே முழுமுதற்கடவுள் என்பதைக்காட்டும்பொருட்டாகவோ அல்லது எல்லாத்தேசங்களிலும் தமிழ்த்தேசம் சிறந்தது என்றுகாட்டவோ? அல்லது கொங்குநாடே சிறந்தபுண்ணியபூமி என்றாக்கவோ? அல்லது எல்லாவற்றுள்ளும் பூந்துறை நாடே மேலானது என்று நினைக்கவோ? மற்றெந்தக்காரணத்தாலோ தெரியவில்லை, ஸ்ரீபார்வதிதேவியார்புன்சிரிப்புடன் தமது அருமைவாய்ந்த தமது இருகரத்தாலும்பரமேசுரருடைய கண்களைமூடினர். உடனே உலகம்அந்தகாரமாய்விட்டது. சூரிய சந்திரர் மற்றைச்சுடர் ஒளிகளும் மழுங்கிவிட்டன. ஒருபொருளும் கண்ணுக்குத்தோற்றவில்லை. பல்லாயிரம் ஜீவன்களும் குருடுகளாய்விட்டன. இதனால் தேவர்முனிவர்களுடைய நித்திய நைமித்தியங்கள் நின்றுவிட்டன. உலகம் இருட்டானதால் திடுக்கிட்டு உமாதேவியார் கையை எடுத்து ஸ்வாமியை வணங்கி இறைவனே நான்அபராதியாய்விட்டேன் மன்னிக்கவேண்டுமென வேண்டினர். பரமேசுரருந் திருவுளங்கொண்டு "தட்சிணபூமிசென்று தவஞ்செய்வாயாக" எனக்கட்டளையிட்டனர். பார்வதிதேவியும், நாம் காட்டினபடியன்றோ உலகம் நடக்கும் எனக்கொண்டு தமிழ்நாட்டில் தொண்டைமண்டலத்திலே காஞ்சிபுரத்திலே கம்பைபாற்றங்கரையிலே மணலிலே சிவலிங்கமமைத்துச் சிவார்ச்சனை செய்து வந்தனர். ஒருநாள் பரமசிவம்தோன்றி மலைமகளே? மூன்று நேத்திரத்தில் ஒருகண்மூடியபாவம் இதனால்நீங்கிற்று. இன்னும் இடமடைதற்குத் தவஞ்செய்யவேண்டும். முதலில் திருவண்ணா

மலைசென்று அக்கினியிலிருந்து நோன்புசெய் என்றுகூறிமறைந்
தனர். ...த்திகள் சூழத் திருவண்ணமலைசென்று அக்கினியி
ல் தவம்செய்தனர். சுவாமி பிரத்தியக்ஷமாய் பராசக்தியே! உன
து ஸ்தோத்திரங்களுக்காக மகிழ்ந்தேன், பூர்வம் வாதாபிமுத
லிய அரக்கர்கள் தோன்றி மானுடர்களை வதைசெய்துவந்தார்கள்
அப்பொழுதுசம்புமஹாமுனியாகத்தில் சிவந்தமேனியுடனும்
வில் பாணங்களைக்கொண்டு கம்பீர குணத்தோடு கூடிய ஒரு அ
ரசன்தோன்றினன். அவனே அக்கினிகுலச்சேரராசன் என்பர்.
மேற்கண்டவாதாபிமுதலிய அரக்கர்களை குலநாசமாக்கி அந்தச்
சேரன் செங்கோல்செலுத்தினன். அந்தசேரனுக்குடையது
கொங்குமண்டலம். அக்கொங்குமண்டலத்தில் பூந்துறையென
ஒருநாடு இருக்கிறது. அது மேலான நாடு. அங்குச்சென்று சங்
கவனத்தில் தவசுசெய்யனக்கட்டளையிட்டனர். பலகோடிசத்தி
கள்சூழ உமாதேவியார் பூந்துறைக்குஎழுந்தருளிக் கூடவந்த
விக்கினேசுரனை யழைத்துஸ்நானத்துக்கு ஒருதடாகம் ஆக்குக
என ஒருவாய்மொழிகூறினர். அப்படியே அதில்ஸ்நானம்செய்த
னர். அம்மையின் ஒருவாய்மொழிகேட்டு அமைத்தபடியால்அக்
கிணற்றுக்கு ஒருவாய்க்கிணறெனப்பெயராயிற்று மற்றயதேவ
மாதர்களும் நீராடிவந்தனர். மலைவளர்காதலியாராகிய பார்வதி
தேவி அவ்விடத்துள்ள சங்கவனத்தில் வெயிலிலிருந்து தவசுசெ
ய்துக்கொண்டிருந்தனர்.

அப்பொழுது தேவலோகத்தில் காமவல்லிக்கொடி படர்
ந்து அழகுசெய்யாநின்ற ஐந்தருநிழலிலே தேவேந்திரன்கொ
லுவீற்றிருந்தனன். அரம்பை.மேனகை, ஊர்வசி முதலியதேவ
மாதர்கள் ஆடல்பாடல்கள் நடத்திக்கொண்டு மகிழ்ந்திருந்தார்
கள். அப்பொழுது தேவகுருவானவர் தேவேந்திரனிடம்வந்த
னர். இவரைக்கண்டு எழுந்துமரியாதைசெய்யாது இருந்தனனெ
ன்று சினந்து. அரம்பை, ஊர்வசி, யென்னும்இவ்விருவீரும்
பூந்துறைநாட்டில் முத்தபாககரில் முத்தியென்னும் தாசிவயற்றி
ல்இரட்டைப் பெண்களாகப்பிறக்ககடவீர்கள்' எனச்சாபமிட்
டனர். கேட்டுத்திடுக்கிட்ட அவ்விருதேவமங்கையர்கள், வருந்தி,



அடிகாள்! தேவரீர் எழுந்தருளியதை நாங்கள் பார்க்கவில் லை
யாதலால்எங்களைமன்னிக்கவேண்டும்'' எனவேண்டினார்கள். வியா
ழபகவான் மாதர்களைப்பார்த்து, நங்கையீர்; நீங்கள் தாசிகளாய்
ப்பிறந்து. பார்வதிதேவியார் தரிசனம்செய்துகொண்டு பனிரண்
டுவ ருஷங்கள் களிப்பீர்களானால், ஐயிராவதமேறியஇந்திரன்வ
ந்துநீங்கள் வாழும் நாட்டில் பொன்மாரி பூமாரிபெய்வித்து உங்
களை மணப்பன். உங்கள்சாபம்தீர்ந்து பழயபடி தேவசரீரம்பெ
றுவீர்களெனக்கூறினர். இதனையேற்றஅந்தஇரண்டுமாதர்களும்
அப்படியே அழகாலும்குணத்தாலும்பிறந்துநல்லவர்களெனப்ப
ட்டார்கள். உமாதேவியர் தவஞ்செய்திருக்க முன்செய்த புண்
ணியத்தால் தரிசித்து ஸ்தோத்திரம் புரிந்துகொண்டிருந்தனர்.

அப்பொழுது பிரமன்முதலிய தேவர்களெல்லோரும் கயி
லாயகிரியை அணுகி பரமேசுரரைத்தரிசித்து எங்கள்நாயகனே
யாங்கள்மெத்த வருத்தத்துள்ளாயிருக்கிறோம். அந்தச்சலந்த
ராசுரனைச் சயிக்கத்தக்க ஆயுதங்களை அநுக்கிரகிக்கவேண்டுமெ
னவேண்டினார்கள். வேண்டுவோருக்குஇரங்கிய சாம்பசிவமூர்த்தி
தேவர்களே அஞ்சாதீர்கள், உலகரக்ஷணார்த்தம் திக்குவிஜயம்
செய்துவருவோம். என்றுகூறினர். தேவர்கள் தங்கள் தங்கள்
வாசஸ்தானம்சேர்ந்தார்கள்.

சலந்தராசுரன், தான்பெரியவரங்களைப்பெற்றிருக்கிறோ
மென்றசெருக்கால், தேவர்முனிவர்களாகிய சாதுக்களை மெத்
தவருத்தினன். அடியார்க்கெளியனாகிய பரமசிவம், வெள்ளிம
லையோனைத்தகும் விருஷபவாகனத்தின்மேல், தேவர்முனி
வர்சூழத் தவம்செய்யும் பார்வதிதேவியார்காணப் பிரத்தியக்ஷ
மாயினர். பலவாறுஸ்தோத்திரம்செய்த அம்மையார், கண்க
ளில்நீர்சொரிய மிகுந்த சந்தோஷமாகத் தரிசித்து, சுவாமி!
அடியாள்வேறாகவும், தாங்கள்வேறாகவும்இருத்தலினாலன்றோ
பல்லினைகள் சூழப் பல வருஷங்கள் தவஞ்செய்யவேண்டியிருக்
கிறது: ஆகையால் தேவரீரது இடப்பாகத்தை வேண்டுகிறேன்
கருணைபுரிதல்வேண்டுமென வேண்டினர். வேண்டிய வேண்டி
யாங்குஉதவும்அண்ணலாராகிய எம்பெருமான் கருணைகொண்டு

மலேமகளே உனதுகடுந்தவத்தைமெச்சினேன்," இடப்பாகந்தா
ள் எனக்கொண்டேன்" என்றுகட்டளையிட்டுப்பின்னும் கூறுவா
ராயினர்." ,, உலககாரணியே,இந்தநாட்டில் கீழ்த்திசையில்அ
தோதெரிகிற் நாககிரியென்னும் தெய்வீகமலே யின்பேரில் தே
வதீர்த்தமென்றபெயரால் ஒரு பரிசுத்ததீர்த்தமுண்டு. அதில்
பொற்றாமரை இருக்கிறது. பூம்பொகுட்டின்பேரிலிருந்து இரு
பத்தாலாயிரம் வருஷங்கள் தவசு செய்வாயேல் அர்த்தபாகம்
அருளுவோம்" என்று கூறிமறைந்தனர். தேவர்கள் முனிவர்க
ள்பொன்மாரி, பூமாரிபெய்தார்கள்.

உலகமாதாவாகிய அம்மையார், அநேககோடி சத்திகளும்
தேவமாதர்களும் தேவமுனிவர்களும் சூழ்ந்துவர, மிகுந்தசந்
தோஷத்துடன் திருநாகபருவதத்தையடைந்து நீர்த்தமாடி தவ
சுக்குரிய பூர்வாங்கங்களை முடித்துக்கொண்டு,தேவதீர்த்தமா
கிய நீரில்,பூமேல் தவசுசெய்துக்கொண்டிருந்தனர். தேவர்முத
லியோர் பூசித்துக்கொண்டிருந்தார். திருவுளங்கொண்ட பரம
பதி அர்த்தபாகம்வழங்க ஸ்ரீ அர்த்தநாரீசுரர்என்னும் திருநா
மம்பூண்டு விளங்காநின்றார்.

## சலந்தராசுரவதம்.

முனிவர்களே! வளைகளையணிந்த பெண்களிடத்துப்பூப்
பைப்போலவும், சமுத்திரத்தில் உப்பைப்போலவும், சோழதே
சத்தில் விற்குடி யென்னும் பதியில் ஜலந்தராசுரன் என்பவன்
உளனான். அவன் தேவர்களைச் சிறையில்வைத்தான். தரும
மென்பதையே அறியான், மூன்றுஉலகத்தையும் ஆண்டுவருவா
ன், பெண்களைக்கண்டமாத்திரத்தில் புணர்ச்சியிலிச்சைகொள்
வான், பாவபுண்ணியங்களை நினையாதசண்டாளனென்று சொல்
லும்படிவாழ்வான், ஏழுசமுத்திரத்தையும் காலாலேகலக்கு
வான், ஏழுமேகத்தையுங் கையால்பிசைந்து குடிப்பான், சத்த
குலபர்வதங்களைப்பந்துபோல எடுத்தாடுவான் திக்குபாலகர்
எட்டுப்பேரையும்பிசைந்து பொடியாகச்செய்வான். உலகத்திலு
ள்ளார் அவன் பாதம்விளக்கல்முதலிய ஏவல்செய்யத்தக்கவர்



கள், கொலை, பொய்,வஞ்சனை இவைகள் அவனிடம் குடிகொண்
டுள்ளபொருள்கள்.பலகலைகளும் வேதங்களையும் கற்றவன் என்
றாலும் துன்பஞ்செய்யாது விடமாட்டான். சந்திர சூரியர் முனி
வர்களும் இவனைநெருங்கமாட்டார்கள். நிம்மதியாக இருக்க
மாட்டார்கள், இவ்வகையாகத்துன்பஞ் செய்துக்கொண்டிருக்
கிறஇவனுடைய கொடுமையைத்தீர்த்தருள வேண்டும்ஐயா வெ
ன்று, பரமேசுரனைத்தேவர்முதலானவர்கள்வேண்டினார்கள் இத
னைக் கேள்வியுற்ற சிவபெருமான் திருவுளங்கொண்ட வராய்
தவம் நிலைக்கும்படி கருணைநோக்கம் செய்தனர். பூதகணங்கள்
கைகொட்டிச் சத்தமிட்டுக்கொண்டு திருவிற்குடி என்னும் நகர்
ப்புற மதிலைச்சூழ்ந்து கொண்டார்கள். அக்காலத்தே சலந்தரா
சுரனுடைய இடப்புறத்துத் தோளும் கண்களும் துடித்தன.
இதனை மந்திரிகளிடத்துச்சொன்னான். அவர்கள் தங்களரசனை
நோக்கி ஐயா, இக்குறியானது வெற்றியும் வீரமும் செல்வமும்
விருதும் அழிந்துபோகுங்காலத்துத்தான் தோன்றத்தக்கது
என்று கூறிப் புறப்பட்டுப் போகும் முன்னம் நந்திகேசுரர் ஒரு
தூதனைச் சிவபிரானுடைய பெருமைதங்கிய ஒரு திருமுகத்
தைக்கொண்டுவந்து நீட்டத்திடுகிட்ட அசுரன் ஏதூதா நீ
எந்தவூர்? உன் பெயரென்ன? யாவன் உனது வேந்தன் எனக்
கேட்டுக்கொண்டே திருமுகத்தை விரித்து வாசித்துப்பார்த்தா
ன் மந்திரி, தந்திரி, சேனைக்காவலருக்குக் கூறிச்சண்டை தொட
ங்குவதே சரியென்று சொன்னான். கேள்வியுற்ற நந்திகேசுரர்
சிவபிரானுக்கு அறிவித்தனர். விருஷபக்கொடியை யுடைய பர
மசிவமானவர் நந்திகேசுரருக்கு விஜயாபிஷேகத்தைச் செய்து
ரண பேரியை முழங்கச்செய்து பூதசேனை பிசாசு சேனை முத
லியவைகள் ஆயிரத்தைநூறு வெள்ளம் அளவும் அதற்கு இர
ண்டத்தனை ஆயுதங்களைக் கொண்டு நெருங்கினார்கள். இதற்கு
இரட்டிப்பான அசுரசேனைகளும் வந்துவிட்டன. இவ்விருவகை
ச்சேனைவீரர்களும் ஒருவரை ஒருவர் எட்டிப்பிடித்தும் பற்க
களை நெறநெறவென்று கடித்தும்,குடலைப்பிடுங்கி இரத்தத்தை

க்குத்தும் தலையைவெட்டியும் வீராவேசம் பேசியும் சண்டை செய்தார்கள். அடிபொறுது காலையில் ஓடிய வர்களும் வழிதேடி ஓடுபவர்களும் பதைபதைத்தும் தேவர்சேனையும் அசுரசேனை யுங்கலந்து சண்டை செய்தது. இதில் குடலற்ற வர்களும் உடலற்றவர்களும் சுயகுணமற்றவர்களும் நடக்க முடியாதவர்களும் உடையற்றவர்களும் ஆயுதமற்றவர்களும் உள்ளீரமற்றவர்களு மாக் மலைபோலப், பிணம் குவிந்து விட்டன. இதனைநோக்கிய சலந்தரன் மனது கலங்கினன்; பெண்களெல்லாரும் மாண்டு போன தமது உற்றார்க்கும், வருந்தி அழுதார்கள். இதனையறிந்த சலந்தரனென்பவன் மனது கலக்கமுற்று உலகத்தில் தான் வைத்துள்ள மூலபல சைனியங்களையெல்லாம் ஓலைவிட்டுத் திரட்டி வீரர்களே! நந்திகேசுரர்சேனையால் நம்து படை பலமடிந்து போயிற்று ஆதலால் எதிரி பலவானாக இருப்பதால் நாம் சிறை செய்துள்ளவர்களை விட்டு விட்டு சமாதானமாய் விடலாமா? அல்லது எவ்வளவு நஷ்டமானாலும் யுத்தத்தையே நடத்துவோமா? எனக் கேட்டனன். இதனைக் கேள்வியுற்றவர்கள் ராஜ சிங்கமே! அரசர்களுக்கு வெற்றியே பிரதானம். வெற்றிக்கு யுத்தமே ஆதாரம். யுத்தத்துக்குப்போனால் விஜயம் பெற்று வருவதொன்று, அல்லது வீரசொர்க்கம் பெறுவது மற்றொன்று இதனால் தான் " தண்டுக்குப்போனால் ரண்டி லொன்று!! என்பது பழமொழி ஆதலின் நாம் சூரர்களாக இருந்து வணங்குவது இழிவான காரியம் என்றார்கள். இதனைக்கேள்வியுற்ற அசுரேந்திரன் ரணபேரி முழக்கச்செய்து, யுத்த கோலம் பூண்டு போர்க்களத்துக்குப் புறப்பட்டான். நந்திகேசுரர் சேனையுடன் எதிர்த்தான். தேர் யானை குதிரை சேனைகளெள்ளாம் மாய்ந்து விட்டன சிவபெருமான், கால் பெருவிரலால் தரையில் கீறி அந்த வட்டத்தைப்பார்க்க வந்த ஒரு சக்கிராயுதத்தை ஏவினர். அது சுழன்று வந்து சூரன் தலையை அறுத்து விட்டது. தேவர்கள்,

பூமாரி பெய்தார்கள். மலைவிதயாகத்தோத்திரம் செய்து கொண்டு பார்வதிதேவியார் தவஞ்செய்துள்ள வனத்தை தேவர்கள் அடைந்து துதிசெய்தார்கள்.

உ

## தேவர்கள் பூசை.

17542951

சாம்பவர்களே !

பூந்துறையிலே பிரசித்தம் பொருந்திய தீர்த்தங்களுண்டு. அதற்க்குக் கிழக்குத்திக்கிலே இந்திர தீர்த்தம் அந்தத் தீர்த்தம் எப்போதும்சவ்வாது மணம் கமழும். அதற்கு வடக்கே பிரம தீர்த்தம் சண்பக தீர்த்தம் அதன் வடக்குத் திக்கில் விஷ்ணு தீர்த்தம் அதன் வடக்கே சக்ர தீர்த்தமென்று சொல்வர் அதற்கு வடக்கே சிவதீர்த்தம் அதற்கு நேர் மேற்கே காளி தீர்த்தமிருக்கிறது. இதற்குத் தெற்கே லட்சுமி தீர்த்தம் இதற்குத் தாமரைத் தடாகமென்றும் பெயர் கூறுவர். வடகிழக்கே சர்வதீர்த்தம் இதற்கு கிழக்கே பொன்னி நதி ஆகும். இதற்கு வடக்கே வானி தீர்த்தமிருக்கிறது. தெற்குப்பக்கத்தே சண்பக நதி அதன் தெற்குப் புறம் அநும நதி காஞ்சி நதி முழுக்க மானது விசேடமாக இருக்கும். இப்படிக்கு அநேக தீர்த்தங்கள் விசேஷமானவைகள். இவைகளுக்கு மேலாக ஒரு தீர்த்த முண்டு அது சென்னிமலை மாமாங்க தீர்த்தம் என்னும் திரு நாமம் பெற்றுள்ளது. அந்தத்தீர்த்தத்தில் மூழ்கினால் கன்ம வினைகளைப் போக்கும் அதுவன்றி ஐராவத தீர்த்தம் என்று ஒப்பற்ற தீர்த்தம் ஒன்று உண்டு அசுவ தீர்த்தமென்றும் ஒன்று அவற்றில் மூழ்கினால் வந்திகளானோரும் கருப்பங்கொள்வார்கள். பின்பு சிவலோக பதவியையும் பெறுவார்கள்.

ஒற்றைக்கொம்பை யுடைய விநாயக மூர்த்தியினது தீர்த்தமுதலாகிய தீர்த்தங்களில் முறைப்படி மூழ்கி மனமகிழ்ச்சி யுடையவர்களாய் நீர்ப்பூ, நிலப்பூ, கொடிப்பூ, கோட்டுப்பூக்களைப் பரமேசுரரது திருமேனியிற்சாத்தி எங்கள் மன இருளை நீக்கும் பரஞ்சுடரே! எங்கள் பதியே; எனத் தேவேந்திரன் முதலான தேவர்கள் பணிந்து போற்றிப் பரமேசுரருடைய திருமேனியைத் தரிசித்தார்கள். தும்புரு நாரதர் என்பவர்கள் கீதம்பாடினார்கள். தேவர்கள் புஷ்பமாரி பெய்தார்கள் அரம்பை முதலான தேவமாதர்கள் தம்புருவை மீட்டினார்கள் நந்தி கேசுரர் தாந்தித்தோம் என மத்தள முழக்க, அகஸ்தியர்

முதலான முனிபுங்கவர்கள் வேத கோஷம் செய்ய, குறுகிய
காலையுடைய பூத கணங்கள் குடை பிடிக்க அடியார் கூட்டங்
கள் போற்றிசெய்து இருகண்களில் சந்தோஷத்தால் சுரக்கும்
தண்ணீர்த்துளி உதிர்த்து ஆடினார்கள். தேவேந்திரன் தனது
ஆயிரங்கண்களாலும் மாறாது பார்த்தான். எவ்விதம் தரிசனம்
காணப்பட்டானென்றால், பரமேசுரரது திருமுடிமேல் தழும்பு
நெற்றியில் நெருப்பு, வாயிற் சிவப்பு, இடுப்பி லுடுப்பு, மலர்க்
கையில் வெற்புப் பாம்பு வம்பு திருமார்பில் என்பு, இதயத்தில்
லன்பு இவ்விதமாக திருமேனி முழுதும் பு ஆய்த்தோன்றத்
தேவர்கள் புஷ்ப வனநாதர் எனத்திருநாம மிட்டு வாழ்த்தினார்.
கள். இப்படித்தோத்திரஞ்செய்த தேவர்களில் விஷ்ணுவை
நோக்கி எ மாதவா? இதயமலராலெனை அருச்சித்த தற்கு
மகிழ்ந்தேன், ஆதலின் தாமோதரன் என்னும் பெயர் தரித்து
இங்கு வாழ்வாயெனக்கட்டளையிட்ட அருளை யெவராலும் புகழ்
ந்து சொல்லும் தரமன்று. இந்த சங்கவனத்தில் எழுந்தருளி
இருபத்தோராயிர வருஷங்கள் மெய்த்தவம் உமாதேவியார் செ
ய்தருச்சித்த இந்த பிம்பத்திலிருந்து மான்மழு திருநேத்திர
ராய் விருஷபாரூடராய்த் தான்தோன்றி வந்த நாதர் இவ
ரெனக்கண்டு தேவர்கள் போற்றினார்கள். விசுவகம்மியன் ஒரு
சிவலிங்கம்செய்து தென் பாரிசத்தில் பிரதிஷ்டித்து அர்ச்சனை
செய்தான் இந்திரனது யானையாகிய ஐராவதமானது மதம்பொ
ழிய வெள்ளோடையான பாலோடை யருகே அர்ச்சித்திருந்த
பாடகவல்லிசமேதராக விளங்கும் சர்வலிங்க நாதர் எழுந்தரு
ளியிருக்க அதனைத்தேவர்கள் வணங்கினார்கள். பாண்டியராச
னால் பூசிக்கப்பட்டு வரம்பெற்று இந்திரனை வெல்லும் தாம்
அருளிய நசயனூரில் வீற்றிருந்தருளும் பரமேசுரனை வணங்கி
னார்கள், சத்தமாதர்கள் பூசித்துவரம்பெற்ற எழுமாத்தூர்ச்சி
வபிரானை வணங்கினார்கள். அந்தப்பெருமை சிறந்தது' ஒருகாலத்
தில் எழுமாதர்கள்கூடி' பந்து அம்மனை யாடியபின்பு ஒருநதி
யில் மூழ்கினார்கள் முன்செய்வினையால் பெண்ருபம் மாறி ஆண்
மக்களாயினார்கள் வருந்தினார்கள் நீங்கள் தமிழ்தேசத்தில் கொ



ங்குமண்டலத்தில் நல்லவனத்தையடைந்து ஆகமவிதிப்படிச்
சிவலிங்கபூஜைசெய்வீர்களானால் சிவானுக்ரகத்தால் இவ்வுருநீ
ங்கிநல்லுருவமும்வரமும் பெறுவீர்களென வொருவாக்கெழுந்
து, அப்படியே பூசித்து வரத்தைப்பெற்றுச்சென்றார்கள். இந்தலி
ங்கத்தை பூசிக்கும் ஆசையால் அகஸ்தியமுனிவர் வந்தனர். வ
ழியில் வில்வலன், வாதாபி என்னும் இரண்டு அசுரர்களின் வா
தாபிஒரு ஆட்டுக்கடாவாக ஆனான். வில்வலன் குறுமுனியைவ
ணங்கித்தம்மிடத்து உணவுகொள்ளவேண்டினான்.' முனிவர் ஒ
ப்பினர். அந்த ஆட்டையறுத்துச்சமைத்து அகஸ்தியருக்குப்ப
டைத்தனன்' உண்டவுடன் வில்வலன் தம்பியை அழைத் தான்.
உணவாக உட் புகுந்த இறைச்சிதிரண்டு உருவாகப்போவதை
உணர்ந்த அகஸ்தியர்' ஜீர்ணமாகுக எனவயற்றைத்தடவினார்.
ஜீரணமாய்விட்டான்' எதிர்த்தவில்வலனும் மாண்டான் இவ்வி
தம் விருந்திட்டுப் பலமுனிவர்களைக்கொன்று தின்னும் வழக்க
முடையவர்களிவர்கள்' இவர்களிறந்ததால் ஹத்திவந்ததே என
அகஸ்தியர் வருந்தினர்' ஆதிசேஷனுக்கும் வாயுதேவனுக்கும்
நேர்ந்த சண்டையில் வாயுவால்பெயர்த்து எறிந்தமேருமலைச்சி
கரத்தில் ஒன்றுகொங்கு மண்டலத்தில் அனுமநதிக்குத்தெற்கு
ப்பக்கமாக வீழ்ந்து கனகாசலமெனப்பெயராய் வழங்குகின்ற
து' அந்தமலையின் அதிசயம் பல, அங்குஎழுந்தருளிய குகப்பி
ரானையும், அதன்கீழ்பாலுள்ள சத்தீசரையும் வணங்குவாயாக
வென அருளி மறைந்தனன் அவ்வாறே பூசித்து குறுமுனிபொதி
யையைச்சேர்ந்தார்,

கலியுகத்தில் சோழதேசத்து வணிகன் ஒருவன் சேரதே
சத்திற்சென்று மிளகு வாங்கிப் பொதிமாட்டிற் போட்டுக்கொ
ண்டுவரும் வழியில் பொழுது போயிற்று. அந்தக்கனககிரிக்குக்
கீழ்பால் உள்ள ஊரில் தங்கினான் விடிந்தபின் பரமேசுரன்
ஒரு சித்த வடிவுகொண்டு கொஞ்சம் மிளகு கேட்டார் வணி
கன் ஐயா, இது பயற்றுப் பொதியென்று பொய் சொல்லி சேர
நாட்டுக்குப் போய்விட்டான். அங்கே மிளகு நிலைவரம்பேசிப்
பணத்தை வாங்கி மூட்டை கட்டிக்கொண்டு மிளகு மூட்டை

யை எடுத்துக்கொள்ளச்சொன்னான். வாங்கினவர்கள் அவிழ்த்துப்பார்த்தார்கள் பச்சைப்பயறாயிருந்தது. வாங்கினவர்கள் இச்செட்டியைப்புரட்டன் என இம்சிக்கத்தொடங்கினார்கள். வழியில்அவ்வனத்தில் மிளகைப்பயறென்று சொன்னேனல்லவா அதனால் மிளகு கேட்ட சித்தர் மகத்துவத்தால் பயறாய்விட்டது; இது பழயபடி மிளகாகுமேல், இதனை விற்றபொருளையெல்லாம் அவ்வூர் சத்தியீசருக்கே அர்ப்பிதம் செய்வேன் என வேண்டினன் உடனே அந்த மூட்டைகள் மிளகாயின. பார்த்தவர்கள் அது சத்தியுள்ள ஈசுரனென்பது தகும் என்று அதிசயித்தார்கள்.

அந்தச்சத்தியீசுரனை முன்யுகங்களில் பிரமன், விஷ்ணு, சத்தமாதர்கள், தேவர்கள், அகஸ்தியர் பாண்டு அரசன் இவர்கள் பூசித்து வரத்தைப்பெற்றார்கள்.

## கரிகாற் சோழன் சரிதை.

பத்திமான்களே!

பலவளஞ்செறிந்த உறையூரிலிருந்து சோழநாடு ஆண்டுவந்த பராந்தகன் என்னும் சோழன் பெண்மோகத்தில் மூழ்கினவனாக இருந்தான். அப்பொழுது 'சாரமாமுனி என்பவர் நந்தனவனப்பயிர்செய்து, திருச்சிறாப்பள்ளித் தாயுமானேசுரருக்குப் புஷ்பப்பணிவிடைசெய்து கொண்டிருந்தார். அம்முனிவர் விசேஷமாக செவ்வந்திப்பூவைப் பிரியமாக எடுத்துத்தொடுத்துச் சிவபிரானுக்கு அர்ப்பித்துக் கண் குளிரக்கண்டு தரிசிப்பர். இப்புட்பங்களை அரசன் மனைவி வேண்டினள். மானிடருக்குப் பூக்கொடுக்க இவர் இசையவில்லை. திருட்டுத்தனமாகவாவது கொண்டுவரும்படி வேண்டினள். அரசன் ஊழியர்கள் இரவில்கொய்துபோய்க்கொடுத்துவருவார்கள். களவுபோவது தெரிந்தமுனிவர், எவ்வகையேனும்பூக் கள்வனைக்காணவேண்டுமென்று இரவில் மறைந்திருந்தனர். கள்வனைக்கண்டனர் அரசனிடம் போய் சிவபிரானுக்கு உபயோகமாகும் புஷ்பத்தைக் களவாடி மனைவிக்குக்கொடுப்பது ராஜ தர்மமா! இவ்வுயிரை நமன் கொண்டு போனவுடன் கட்டையில் இத்தேகத்



தைவைத்துச் சுடும்போது, சூரை நாற்றம் அடிக்கும் அல்லது சந்தனம் ஜவ்வாது செவ்வந்தி வாசனை மணக்குமோ எனக்கடிந்து கூறினர் முனிவர். அரசன் பொருனாய் அந்த நந்தனவனத்தை அழித்தான் முனிவர் சினந்து உறையூரில் மண்மாரிபொழிக எனச்சாபமிட்டனர்.

அவ்வாறேமண்மாரி பொழிந்தது இவ் ஆபத்தினின்று தப்பித்துக்கொள்ள, ஓர்கம்மியனாற்செய்த ஒரு மயில்யந்திரத்தின்மேல் அரசனும் மனைவியும் ஏறிக்கொண்டார்கள் சூத்திரத்தைத் திருப்பமேலெழுந்து பறந்து போயிற்று. வழியில் அரசன் தவறிவிழுந்துவிட்டான். இந்த சூத்திரமயிலானதுகொங்கு நாட்டில் இறங்கியது. அவ்வூரில் குழந்தை பிறந்தது இறங்கிய வூரைச் சூலூர் என்பார்கள். சோழநாட்டுக்கு அரசுவேண்டி யானைகையில் குட நீரும் பூமாலையும் கொடுத்தனுப்பினார்கள் அது சூலூரிலிருந்த இந்தக்குழந்தை தலையில் நீரைஊற்றி மாலையை கழுத்தில் இட்டது. யானை இக்குழந்தையை எடுக்க முடியவில்லை ஒரு கரியை எடுத்துக்காலில் கீறினார்கள் எடுத்துபோயிற்று முடிசூட்டிக்கொண்டான் பின்பு பேரூருக்குப்போய் பலதிருப்பணிகள் செய்து பூசித்து வழியில் பலதலங்களைத்தொழுதுகொண்டு பூந்துறைக்கு வந்தான். பங்குனிமாதத்தில் திருவிழா செய்தான் கரிய காளி பிரதிட்டை செய்தான். ஈரோட்டில் ஒரு சிவலிங்க பிரதிட்டையும், கரிய பெருமாள், பிரதிட்டையும், எழுமாத்தூரில் சத்தீசர் ஆலயகோபுராதிகளும் செய்தான். தாமோதரப்பெருமாளுக்கு புரட்டாசி மாதத்தில் உற்சபவம் செய்தான். இதுவுமன்றி நாலு வீட்டுக்கும் செய்து ஐந்தாம் வீடாகிய பிடாரியூர் காளி பூசைசெய்த தலம் அதில் முருகவேலருக்கு விசேஷமாகப்பூசத்தேர் நடத்திவைத்தனன், இவ்வகைத் திருப்பணிப்பலனால் மிகுந்த வெற்றிகொண்டு கரிகாற் சோழன் வாழ்ந்தான்.

குலோத்துங்கசோழனென்பவன் ஊர் ஒன்பது, மங்கலம் நான்கு ஓடை நான்கு பள்ளி இரண்டு நிலை இரண்டு துறை இரண்டு பாடி ஒன்று தொழு ஒன்று மலை ஒன்று, வாச்சி ஒன்று தல்

ஒன்று குறிச்சி ஒன்று விளக்கு ஒன்று கம் ஒன்று விளக்கேத்
தி ஒன்றுஎன்னும் முடிபுகளை யுடைய முப்பத்திரண்டு ஊர்களை
யும் முப்பத்திரண்டு வகைத்தருமங்களென ஏற்படுத்தினன்.

## சேரமான் சரிதை

கீழ்க்கடல், மேற்கடல், வேங்கடம், கன்னியாகுமரி யென்
னும்நான்கு எல்லைக்கு உள்பட்ட தமிழ்நாட்டில் உறையூர் சோ
ழனும், மதுரை பாண்டியனும், வஞ்சி சேரனுமாக இருந்து அ
ரசாக்ஷிசெய்து வந்தனர். பயிற்றொழிலை நடத்தும் பொருட்டுக்
காஞ்சிபுரத்திலிருந்து நான்கு தலைவர்களை அழைத்துச்சோழநா
ட்டிலும் பாண்டி நாட்டிலும் சேரநாட்டிலும் குடியேற்றினார்
கள். இப்படிக்குடி யேறும்கங்கா குலத்தவர்களில், கொங்கு நா
ட்டரசன் நால்வரை நான்குஇடங்களில் வைத்தான் அதில் பூந்
துறைநண்ணாவுடையார் வழியில் பதினொரு பேர்கள்வந்தார்கள்.
வெள்ளோடு உலகுடையான் வழியில் ஒன்பதுபேர் வந்தார்கள்
நசையனூர் வீரனுக்கு ஏழுபேர்கள் எழுமாத்தூர் உலகுடையா
னுக்கு ஐவர் ஆக முப்பத்திரண்டு பேர்களையும் முப்பத்திரண்டு
கிராமத்திலும் குடியேற்றினன். இவர்கள் வழியே இருபத்து
நான்கு நாடும் பரவினார்கள். இவர்கள் வழிவந்தவர்களில் செங்கு
ன்றூரில் விறன் மிண்டர்என்பவர் பிறந்தார். இவர் சிவபக்தியிற்
சிறந்தோராய்த் திருவாரூருக்குச்சென்றார்.

அவ்வூர் வன்மீகர் திருக்கோயிலுள்ளே அசுத்தமாக வந்த
வர்களை இக்கோட்டரியால் கொல்வேனென்று மனவுறுதிசெய்து,
கொண்டு விடியற்காலை எழுந்திருந்து ஸ்நான அநுஷ்டானங்
களை முடித்துக்கொண்டு ஆலயத்தில் அவர் பார்த்திருப்பார்.
ஒருநாள் வன்மீக நாதர் திருவருளால் சுந்தர மூர்த்தி ஆலயத்
துக்கு வந்தார் வெற்றிலை பாக்குமென்றுக்கொண்டு உல்லாசமா
க வருவதைப்பார்த்தார். விறன் மிண்டர் கோபமீறினவராய் வா
ய்த்தம்பலத்துடன் வரும் சுந்தரரைக் கோட்ரியால் வெட்டுவே
னென்று கையைத்தூக்கினார். இதுகண்ட சுந்தரர் கோயிலுட்
புகுந்து கதவு தாளிட்டுக்கொண்டார். இதுபொழுது விறன்



மிண்டர் இந்த அசுத்தர் புகுந்த ஆலயமுள்ள ஊர் எல்லையிலும்
இருக்கக்கூடாதென எண்ணங்கொண்டு புறநகரில் வசித்திருந்
து அங்குவரும் அடியார்களுக்கு அன்னம் அளித்துக்கொண்டி
ருந்தனர்.

உலாச்சோழன் காலத்தில் பஞ்சம் பரவினதால் அநேகர்
பசியாலும் நோயாலும் மெத்த வாடினார்கள். அக்காலத்தில் ம
துராபுரியில் எழுந்தருளியுள்ள சொக்கநாதப்பெருமாள் யாழ்ப்
பாணநாயனாருக்குத் திரவியம் கொடுக்கும்படி "மதிமலிபுரிசை"
என்னும் திருமுகப்பாசுரம் எழுதி சேரனுக்குக்கொடுத்தனுப்பி
னர். மகிழ்ந்து திருமுகத்திற் கண்டவாறு வேண்டியபொருள்
களை எடுத்துக்கொள்ளும்படி சேரமான் பெருமாள் உதவியனு
ப்பினர். அந்தச்சேரன் சுந்தர மூர்த்தி நாயனாரின் மகிமையறி
ந்து திருவாரூருக்கு வந்து வன்மீக நாதரையும் தியாக ராஜ
ரையும் தரிசித்துப்பரவை நாச்சியாரையும் தரிசித்துத்தன்மனத்
துள்ள கருத்துக்களை யெல்லாந்தெரிவித்துக்கொங்கு நாடுமுழு
வதையும் சிவபிரானுக்கு அற்பிதம் செய்து விட்டனர். சிவப்பிரா
மணர்களை அழைத்து கங்காகுலத்தவர்கள் எங்கே என்றுகேட்க
ப்பசியாலும் நோயினாலும் வருந்தித் தொண்டை நாட்டை அ
டைந்திருக்கிறார்கள் என்றார்கள். நண்ணாவுடையான் மரபில்
வேலப்பநயினார் என்பவர் சேரமான்நாயனாருடன் சேர்ந்தார். திரு
வஞ்சைக் களத்துக்குச்சென்று சேரமான் தனது முடியை நபி
ரூருக்குச்சூட்டினார். பொன்வண்ணத்தந்தாதி ஒன்று சிவபிரான்
மீதுபாடினர். நம்பி ஆரூரன் தேவர்கள் அழைத்து வந்த வெள்
ளை யானையின்பேரில் ஏறிக்கைலாயத்தை அடைந்தனர். சுந்தரர்
கைலாயம் செல்வது கண்ட சேரமான் குதிரையேறி அதன்
காதில் பஞ்சாக்ஷரத்தை ஓதக்கைலாயஞ் சேர்ந்தது. சிவபரஞ்
சுடரின் சந்நிதியில் சேரமான் பெருமாள் உலாப்பிரபந்தத்தை
யரங்கேற்றினர். முன்னமே கொடுக்கப்பெற்ற கொங்குமண்டல
த்தை சிவப்பிராமணர்கள் கொங்கச் செட்டிகளிடம் அடகு
வைத்தார்கள். அக்காலத்தில் பீசங்கு நாட்டுக்கள்ளர்கள் கொ

ங்குநாட்டில் கொள்ளையிட்டுக்குடிகளை உபத்திரவப்படுத்தி வந்தார்கள். இதனை யறிந்த சோழன் இந்தச்சோழமண்டலத்தில் கொள்ளையடிக்கும் கள்ளர்களைப்பிடித்து அடக்குபவர்களுக்கு இந்த நாட்டுக்காணி கொடுக்கிறேனென்று பறையறைவித்தான்.

வடதேசத்திலிருந்து வேட்டுவர்களில் நான்கு தலைவர்கள் வந்தார்கள். அவர்கள் பொத்திராயன், புஜபலராயன், வல்லவராயன், கொங்குராயன் எனப் பெயர் கொண்டவர்கள். இங்கு வந்தவுடன் வெகு சீக்கிரத்தில் கள்ளர்களாலுண்டாகும் பயத்தை நீக்கினார்கள். இதை அறிந்த சோழன் கொங்கு இருபத்து நான்கு நாட்டுக்கும் தலைவர்களென இவர்களுக்குப்பட்டங்கொடுத்தனன். கப்பன் என்னும் மஹா வித்துவானால் சாபம்பெற்று சோழ வமிசம் அழிந்தது. பறையன் அந்த ராச்சியத்தைக்கொண்டு ஆண்டான். அப்படிராச்சியாதிகாரம் பெற்றதும் வேளாளப்பெண்ணை விவாகம் செய்யவேண்டுமென்று எண்ணிப்பெண் கேட்டான். வல்லைக்காளத்தி யென்பவர் பறையர்கள் வருவதை அறிந்து, கற்கம்பம் நட்டுப்பந்தல்போட்டு பெண் நாய் ஒன்றை அந்த மணப்பந்தலுக்குள் கட்டிவைத்து அவ்விடத்தை விட்டுப் போய் விட்டார்கள். பறையர்களெல்லாம் பந்தலுக்குள் வந்து நுழையவே முன்னமே செய்துவைத்த எச்சரிக்கையுடனிருந்த தச்சன் சூத்திரத்தைத்தட்டிவிட்டான். விழுந்தது. உள்ளே வந்த பறையர்களெல்லாம் மாண்டுவிட்டார்கள். அதில் ஒரு புலைச்சி தப்பி ஒரு குழந்தையைப்பெற்றாள். அவன் முதல் மூன்று பட்டங்களை அப்புலையர்கள் ஆண்டார்கள். அவர்கள், வேளாளரைக்கொல்லவேண்டுமென்று வன்மம் வைத்திருந்ததால் கொங்குநாட்டுக்கு வந்த வேளாளர்கள் கவுண்டர் என்ற பட்டத்தை வைத்துக்கொண்டு மறைவாக வாழ்ந்தார்கள். போதாயன ரிஷி வந்து இவர்களுக்கு வேண்டிய சௌசம், அநுட்டானம் பூசைபோசன முதலிய விதிகளையெல்லாம் ஏற்படுத்தினார். அந்தப்படி நியமநிஷ்டைகளுடன் தயாள குணத்தினராய்த்தெய்வவழிபாடு முதலியன செய்து வாழ்ந்திருக்கிறார்கள்.



ஸ்ரீகைலைமலையில் எழுந்தருளியிருக்கும் பரமசிவத்தை வணங்கிய பார்வதிதேவியார், சுவாமி பிரணவ மந்திரத்தின் அர்த்தத்தை தனக்கு சொல்லவேண்டுமென்று கேட்டனர். மலைமகளே உன் மைந்தன் கந்தனை அங்கே விட்டு விட்டு நீ தனியாகவே வருவையேல் அறிவிக்கின்றனமென்றனர். அவ்வாறே தனியாகவந்தபார்வதிதேவிக்குப் பிரணவப்பொருளை உபதேசித்தனர். குழந்தைவடிவேலர் வண்டுருபமெடுத்துப் போய்க்கேட்டனர்; இதனையறிந்தசிவபெருமான் திருட்டுத்தனமாக ரகசியமந்திரத்தைக் கேட்டிருந்த குற்றத்துக்காக பூலோகத்தில் பிராமண, க்ஷத்திரிய, வைசிய, சூத்திர வமிசத்துத்தோன்றுவாயாக எனக்கூறினார்.

இக்கட்டளையை ஏற்ற சிவசுப்பிரமணியரும் சீர்காழியில் பிராமணகுலத்தில் திருஞானசம்பந்தராகவும், அவதரித்துச் சமணரை அழித்து எலும்பைப் பெண்ணாகச்செய்தும் பிரசித்தியடைந்தார். அரசர் குலத்தில் உக்கிரபாண்டியனாகவந்து, வேல், வளை செண்டு ஆயுதங்களைப்பெற்று, கடலைச்சுவறச்செய்து, இந்திரனைமகுடபங்கம்செய்து, மகமேருவைத்தாக்கிப்புகழ்கொண்டார். பின்பு சுவாமிமலையில் வைசியகுலத்தில் சுவாமிநாதனென்னும் பெயர்கொண்டு, இரவில்கன்னிற்கண்ட கன்னிகைகள், விதவைகளும் கற்பமாய்க் குழந்தைபெறச்செய்தல் முதலிய சித்துக்கள் விளையாடிக் கீர்த்திபெற்றனர்.

கொங்குநாட்டில் முத்தூரில் வேளாளகுலத்தில்செல்லப்பனுக்கு மகனாய்த், தோன்றி செல்வக்குமாரனெனப் பெயர்பெற்றுக் கரும்புக்குக்கணு ஏறுவதுபோல வளர்ந்து எல்லாக்கலைகளுங்கற்று சித்தபுருடனாய் வியாதிமுதலியவைகளைத் தீர்த்துப்பின்பு செஞ்சேரிமலைக்குப்போய் மாடுகளைவளர்த்துவந்தனர். மழையற்றுப்போனதால் அங்குநின்றும் பூந்துறைக்குவந்து பசுக்களை விருத்திசெய்தனர். விரதசீலராய் அடுத்துள்ளசேமூர்தங்கி அன்னத்தைநீக்கிப் பால்மாத்திரம் சாப்பிட்டுக்கொண்டு வியாதிமுதலிய துன்பமுற்றோர்களுக்குத் துயரத்தை நீக்கிக்கொண்டிருந்தார்.

அந்தக்காலத்தில் தென்னிலையில் கொங்குராயன்என்பவன் கோட்டைகட்டிக்கொண்டு நாட்டை ஆண்டுக்கொண்டுஇருந்தார். யாரையும் வணங்காது வணங்காமுடியனென்றும் சொல்லும்படி இருந்தான். அப்பொழுது பேராசனுகவடநாட்டில் பிரவுடதேவ' மஹாராஜன் என்பவனுண்டான். அவன்சமுகத்தில் அப்பாச்சி என்னும் விவேகமுள்ள அரசன்வரவில்லை வராதகாரணமென்னவென்றுகேட்க நாட்டுக்கொத்ததுவே கொங்குராயனுக்கும் என்றுசொல்லவே, சிலகன்னப் பறையர்படையை அழைத்துக்கொண்டுதென்னிலைக்கொங்கிராயன் கோட்டையைக்கன்னமிட்டுப்புகுந்து மூக்குறுணி தாலியை அறுத்துக்கொண்டு வரும்பொழுது குப்பன்என்னும் பறையன்வழியில் இறந்தான். உயிர் துறக்கும்பொழுதுசெல்வக்குமாரருக்கு அடிமையானேன்என்றனன். கன்னக்கோலைக் கைக்கொண்டுவாப்பிரசாதவடிவு கொண்டுதுர்வியாதிமுதலியவைகளைநீக்கிப் பூந்துறைச்சேமூரில்வரம்பெற்று வாழ்வதாயினன்.

---

பூந்துறைப்புராணசாரம் முற்றுப்பெற்றது.

## சிறப்புப்பாயிரம்.

திருவாடுதுறைப்,

பொன்னம்பல சுவாமிகளியற்றிய

விருத்தம்

"பன்னிய நல்லெழுத்தொடுசொற் பொருடெரிந்து ஞூதருரை பழுதிலாமல், மன்னுகவிப் புலவரிரு செவிக்கமுதம் போற் கொங்கு வளநன் னாட்டிற், கன்னல் செறி பூந்துறைப்புராணமதைக் காளியணக் கவிஞனன் பாய்ச், சென்னிமலைக் கடவுளர் தங்கிருபையினால் வனப்பு மிகச் செய்பினனே."

வெண்பா.

வேதமுனி குன்றுறைந்தான் மெய்ச்சேடன் மண்சுமந்தான்
[illegible]விதி நாவின்மறைந்திருந்தாள்—ஏதமிலா
[illegible] பூந்துறைநாட் டண்ணல் தமிழ்க் கதிபன்
காழியனை நாவலனைக் கண்டு."

175429